முதியோர் கல்வி

மலர் 1] | ஜூலை 1951 | [இதழ் 1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 SEP 1951

கல்வி இல்லாமை ஒழிக !

1. கல்வி இல்லாமை என்ற கொடுமை
தீரத் தொலைந்திட நாளாச்சு
நாட்டின் நன்மை பொதுவென்று நம்பின் யாரும்
அந்தப் பழியை அகற்றிட வாரும் (கல்வி)

2. அந்த வழக்கம் நாளுக்கு நாளாய்
நம் நாட்டுமக்களை வெட்டுது வாளாய்
நிந்தை மிகுந்து அழிந்திடு முன்னே
எழுந்திடும் இன்றே ஓட்டிடுவோம் என்றும் (கல்வி)

3. வேறு நாட்டிலில்லை, லோகத்தில் எங்குமில்லை
சுதந்திர நாட்டிலே இங்கு எதற்கு, யாருக்கினி
சாதித்து யாரும் கல்வி இல்லாமை இல்லையென்று
கங்கணம் கட்டிடுவோம், வென்றோமென்று முரசு
கொட்டிடுவோம் (கல்வி)

—கோபால்

S.I.A.E.A.

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கம் சென்னை. 1

பொருள் அடக்கம்

முதல் பகுதி

நமது பத்திரிகை ... 1
குன்னூர் முதியோர் கல்வி மகாநாடு ... 3
முதியோர் கல்வி இயக்கம் ஏன்? ... 7
முதியோர் கல்வி ... 9
பஞ்சாயத்துகளும் முதியோர் கல்வியும். 10
வயது வந்தோர் கல்வித் திட்டம் ... 11
முதியோரை படிக்கத் தூண்டுவது எப்படி? ... 16

இரண்டாம் பகுதி

எழுத்தறிவு பாடங்கள் ... 17

மூன்றும் பகுதி

இது உங்களுக்குத் தெரியுமா? ... 21
தேசிய சபதம் ... 22
இந்தியாவில் ஐ. நா.வின் பிரதேச கல்வி மன்றம் ... 24
ஐ. நா.வின் புது டில்லி நூல் நிலையம் ... 24
தென்னிந்தியாவுக்கு 17,000 டன் தானியம்

சந்தா விகிதம்

	ரூ.	அ.
வருட சந்தா ...	2	0
தனிப்பிரதி ...	0	2

விளம்பர விகிதத்திற்கு எழுதவும்.

●

முதியோர் கல்வி
2/21, முதல் லைன் பீச் ரோட்,
சென்னை-1.

எழுத்தாளர்களுக்கு விண்ணப்பம்

முதியோர் கல்வி தொண்டர்களும், புதியதாகப் படிக்க பழகுபவர்களும் நம் பத்திரிகைக்கு கதைகள், கட்டுரைகள், முதியோர் கல்வி இயக்கச் செய்திகள் எழுதி அனுப்பலாம். ஜில்லாக்களிலும், தாலுக்காக்களிலும் எங்கள் நிருபர்களாக இருக்க முதியோர் கல்வி தொண்டர்கள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ஆசிரியர்,
2/21, முதல் லைன் பீச் ரோட்,
சென்னை-1.

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

யை உலகம் எங்கும் உதவ பாரசீக அரசாங்கத்தாரால் முடியாது. ஆகையால் அந்த திட்டத்தைத் தேசியமயமாக்குவது சர்வ தேசியத்துக்கு எதிரிடையாகும். (2) ஏற்றுமதிக்குச் சரியான வசதி இல்லாததால் அருகிலுள்ள ரஷ்யாவுக்கே முக்கால்வாசி எண்ணெயை விற்றுவிடும். இன்றுள்ள நிலைமையில் ரஷ்யாவுக்கு எல்லா எண்ணெயையும் அளித்தால் அது மூன்றாவது மகா யுத்தத்துக்கு அடிப்படையாகும்.

ஆனால் என்ன சொல்லியும் ஈரான் சமாதானத்துக்கு இணங்கவில்லை. அது தன்னுடைய சொந்த நாட்டு மக்களின் நலனை உத்தேசித்து, எண்ணெ ஸ்தாபனத்தைத் தேசியமயமாக்கவேண்டும் என்று தீவிரமாக இருக்கிறது. இந்த கோரிக்கை சர்வ தேச மகா சபையில் பெரிய குழப்பத்தை விளைவித்திருக்கிறது.

JL
T3m2114 N51 MK
N51.1
REGISTRAR
22478b 1951

முதியோர் கல்வி

(தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் மாத இதழ்)

மலர் 1 | ஜுலை 1951 | இதழ் 1

நமது பத்திரிகை

தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கச் சார்பில் ஆங்கிலத்தில் "முதியோர் கல்வி சஞ்சிகை" (Adult Education Review) என்ற பத்திரிகை நடத்தி வருகின்றோம். அந்த பத்திரிகை ஆங்கிலம் தெரிந்த தொண்டர்களுக்கு உபயோகமுள்ள களஞ்சியமாக இருந்து வருகிறது. ஆங்கிலம் தெரியாத ஏனையோர் இதன் பயனை பெறமுடியவில்லை.

நம் தமிழ் நாட்டில் 85 சத விகிதம் படியா மக்கள் கிராமங்களிலே வசித்து வருகின்றார்கள். படித்தவர்களில் ஆங்கிலம் அறிந்த மக்கள் வெகு சிலரே. கிராமங்களில் முதியோர் கல்வியில் தொண்டாற்றும் தொண்டர்கள் அனேகமாக தாய் மொழி நன்கு கற்றவர்கள். முதியோர் கல்வியில் தொண்டாற்ற கிராமங்களில் ஆங்கிலம் அவசியமும் இல்லை. எனவே, நம்முடைய முதியோர் கல்வித் தொண்டர்கள் விருப்பத்திற்கு இணங்க, தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கச் சார்பில் "முதியோர் கல்வி" என்ற தமிழ் மாத பத்திரிகையை மிக்க மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை வெகு நாட்களுக்கு முன்னமே வெளிவந்திருக்கவேண்டும். இடையில் முதியோர் கல்வி வார விழாக்களும், மகாநாடுகளும், முகாம்களும் அடிக்கடி வரவே இப்பத்திரிகை சற்று தாமதமாக வெளிவர நேரிட்டது.

இப்பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் இரண்டாவது வாரத்தில் வெளி வரும்; முதியோர் கல்வி இயக்கத்துக்கு தமிழ் நாட்டில் அவசரமாகவும், அவசியமாகவும் தொண்டாற்ற ஓர் இன்றியமையாத தூண்டுகோலாக இருக்கும்; மக்கள் விரும்பும் ஊழியர்களின் உண்மைத் தோழனாக விளங்கும். முதியோர் கல்வி இயக்கத்தின் சஞ்சிகை மூன்று வகையில் தொண்டர்களுக்குப் பயன்படும்.

முதல் பகுதி

முதியோர் கல்வி இயக்கத் தொண்டர்களுக்கு நம் நாட்டிலும், மற்ற நாடுகளிலும், நடைபெறும் முதியோர் கல்வி இயக்க முறைகள், திட்டங்கள் மற்றும் இந்த இயக்கம் பற்றிய கருத்துக்கள், தொண்டர்களின் கட்டுரைகள் ஆகியவை இப்பகுதியில் வெளிடப்படும்.

இரண்டாம் பகுதி

படிக்க எழுத தெரியாத மக்களுக்கு நான்கே மாதத்தில் படிக்கவும், எழுதவும் கற்றுக்கொடுக்க கூடிய முறையை இப்பகுதியில் சேர்க்கப்படும். எழுத்தறிவுபெற்ற மக்கள் எல்லோரும், இந்த இயக்கத்தில் பங்கு கொள்ளவேண்டுமென்ற இப்பத்திரிகையின் நோக்கத்துடன் இப்பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அனுபவமுள்ள வயது வந்தோர்களின் மனோபாவத்துக்கு ஒட்டி எவ்விதம் இம் முறையை கையாண்டால் சீக்கிரத்தில் கற்பிக்கலாம் என்ற குறிப்புகளும் கொடுக்கப்படும். குறிப்புகளை தெரிந்து கொண்டவர்கள் யாவரும் எப்பொழுதாவது, எங்கேயாவது, யாருக்காவது மிக எளிதில்

சொல்லிக் கொடுக்கலாம். ஒரு வாரத்துக்கு ஓர் பாடமாக வகுத்து ஒவ்வொரு இதழிலும் நான்கு பாடங்கள் கொடுக்கப்படும்.

மூன்றும் பகுதி

புதிதாக படிக்க தெரிந்தவர்களுக்கு, மாதந் தோறும் நம் நாட்டிலும் மற்ற நாடுகளிலும் நடக்கும் முக்கியமான செய்திகள் எளிய நடையில் வெளியிடப்படும். மக்கள் விரும்பும் உழைப்பாளிக்கு தன் உழைப்பை விளக்க வியாசங்கள், கட்டுரைகள், கதைகள் முதலிய வைகள் இதில் சேர்க்கப்படும். இப்பகுதியில் அனேகமாக புதிதாக எழுத்தறிவு பெற்ற மக்களுக்கு சலுகை காட்டப்படும். மாதந் தோறும், கட்டுரை, கதைப் போட்டி நடத்தப் படும். அவைகளுக்கு ஏற்ற பரிசுகளும் வழங் கப்படும்.

இந்த இயக்கம் வெற்றி பெற வேண்டு மானால் படித்த மக்கள் எல்லோரும் தொண் டாற்றவேண்டும். அரசாங்கம் அள்ளித்தரும் என்ற எண்ணத்தை முக்கியமாக தொண்டர் கள் அறவே மறந்துவிடவேண்டும். ஆனால் இவ்வியக்கம் மக்கள் இயக்கம், மக்களுக்காக மக்களால் ஆக்கப்பட்டது. அரசாங்கம் தங்களால் இயன்றதை அவசரமாகவும், மிக அக்கரையா கவும் செய்தல் வேண்டும். முதியோர் கல்வி இயக்கமே உலக உண்மையான சமாதா னத்துக்கும், சுதந்தர சுகத்தை பெறவும் உத வும். பெற்றோர்கள் இன்றைக்குள்ள மக்கள், அவர்களுக்கு போதிய நிரந்தரமான எழுத் தறிவு இல்லாவிடில் எந்த அரசாங்கம் எவ் விதமான நல்ல திட்டங்கள் வகுத்தாலும் பலனளிப்பது கடினம். அது உலகம் அறிந்த விஷயம்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு சர்க்கார் பணஉதவியும் ஏற்படும். தினசரி பத்திரிகைகள் முதலிய பத்திரிகை களைப் படிக்க இலவச வாசகசாலைகளும் ஏற் படும். அறிவு வளர்ச்சிக்கு வேறுவழிகளும் ஏற் பட்டு வருகின்றன. பல்கலை கழக ஆசிரியர் களும் இந்த பெருந்தொண்டில் ஈடுபட்டு வரு கின்றார்கள். இவ்வாண்டில் அண்ணுமலை பல் கலைக் கழக ஆசிரியர்கள் அரிய பெரிய விஞ் ஞான அறிவு விஷயங்களை ஆரம்பக் கல்வி முதியோர் கல்வி ஆசிரியர்களுக்கு அறிவிக்க ஒரு பயிற்சி பள்ளிக்கூடத்தை விடுமுறைநாட் களில் நடத்தினர்கள்.

இப்படி பலதுறைகளில் முதியோர்களுக்கு எழுத்தறிவும் விஞ்ஞான அறிவும் சுகாதாரம் பொருளாதாரம் அரசியல் முதலிய விஷயங் களின் அறிவும் ஏற்பட பெரும்முயற்சிகள் ஏற்பட்டு வருகின்றன. புதுப்பஞ்சாயத்தும் சட்டப்படி பஞ்சாயத்துகளுக்கு கிராம முன் னேற்ற உழைப்புக்கு அதிகாரமும் வரி வசூல் பண்ணும் உரிமையும் ஏற்பட்டிருக்கின்றன. கிராம பஞ்சாயத்துகள் முதியோர் கல்வி திட் டங்களை நன்கமைத்து நடத்திப் பரிபாலனம் செய்வது முக்கிய கடமையாகும். அப் பொழுதுதான் குடியரசும் சுதந்திரமும் நன் ருக நிலைத்துவாழும், தேசியம் வளரும், அறிவு வளர்ச்சியும் நாகரீகமும் மேலான நிலைமையை அடையமுடியும், வறுமை நீங்கும், சுகவாழ்வு ஏற்படும், அரசியல் கேடற்ற உயர்ந்த நிலையை அடையும் என்பது திண்ணம்.

படியாதவர் படும்பாடு

வெள்ளித்திரைப் படம்

கூடிய சீக்கிரம் வெளிவரும்

தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் அளவு கடந்த ஆதரவு அளிக்கக் கோருகிறோம்.

குன்னூர் முதியோர் கல்வி மகாநாடு

மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உத்தியோகஸ்தர்களுக்கும் பொதுமக்களுக்கு மிடையே ஒத்துழைப்பு மிக மிக அவசியம் என வற்புறுத்தினர்.

கனம் திரு. ஜே. எல். பி. ரோச்-விக்டோரியா அவர்கள் முதியோர் கல்வியின் முயற்சியினைக் குறித்துக் குறை கூறுவோருக்கு அளித்த பதில்.

கோயம்புத்தூர் நீலகிரி ஜில்லாக்களின் முதியோர் கல்வி ஊழியரின் மகாநாடு, குன்னூர் செயின்ட் ஆண்டொனி உயர்தரப் பள்ளியில், 1951-ம் ஆண்டு மே மாதம் 20-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு நடைபெற்றது. அப்போது **மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள்** ஜில்லா உயர்தர உத்தியோகஸ்தருக்கும் பொதுமக்களுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு மிக அவசியம் என வற்புறுத்திப் பேசினர்.

கனம் திரு. ரோச்-விக்டோரியா, உணவு மந்திரி தலைமை வகித்து, "முதியோர் கல்வி இயக்கத்தால் காலம், பணம், முயற்சி இவற்றை வீணாக்குவதாகக் குறை கூறுவோருக்குத் தக்க பதில் அளித்தார். "குறை கூறுவோர் இனி எவ்விதமான குறைகளைக் கூறினும் அவற்றைக் குறித்துக் கவலைப்படோம்! என்றார். மேலும் அவர் பேசுகையில் "இனி நம்முடைய உயர்தர உத்யோகஸ்தர் பணிவும் நல்லொழுக்கும் அமையப் பொது மக்கள் தேவைக்கு ஏற்றவாறு இந்த இயக்கம் மிக அதிகமாகப் பரவச் செய்வார்கள் என்று நம்புவதாக" கூறினர்.

நோய்வாய்ப்பட்டிருந்தும் திரு. கே. மாதவ மேனன் மகாநாட்டிற்கு வந்திருந்தார்; அவர் பேசுகையில் "முதியோர் கல்வி ஊழியத்தை அரசாங்கம் மாத்திரம் தனியே செய்து முடிக்க முடியாது. ஆகவே மக்களிடத்திலிருந்தும் படித்த ஒவ்வொரு முதியோரிடத்திலிருந்தும் வைராக்கியத்தோடு கூடிய நல் முயற்சி எழவேண்டும். ஆயினும் ஆட்சிமுறை ஒழுங்காக நடைபெற உத்யோகஸ்தரின் அதிகாரத் தோரணையும் ஒரு சிறிது அவசியமே என்றார்.

காந்திபுரம் முனிசிபல் முதியோர் கல்விச்சாலை மாணவர்கள் சில பாடல்களைப் பாடி பிரார்த்தனை செய்தனர்; கூட்டம் தொடங்கிற்று.

திரு. மஹாலிங்கம் அவர்களின் வரவேற்பு உரை

கோயம்புத்தூர் ஜில்லா முதியோர் கல்விச்சங்கத்தின் உப தலைவரான திரு. என். மஹாலிங்கம் அவர்கள் கனம் கவர்னர், மந்திரிகள் பிற கனதனவான்கள் முதிவியோரை வரவேற்கும்போது, உரைத்ததாவது; கோயம்புத்தூர் நீலகிரி ஜில்லாக்களின் முதியோர் கல்வி ஊழியர்களின் சார்பில் கனம் கவர்னர் மந்திரிகள், ஊழியர்கள் இவர்களுக்கு மிகவும் அன்பான அழைப்பை விடுக்கின்றேன். இம்மாதிரி நடைபெறுவது இதுவே முதல் முறை. முதியோர் கல்வி ஊழியர்கள் பெருமை பாராட்ட வேண்டிய ஒரு நாளாகும் இது. மேலும் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் இங்கு வந்து மிகச் சிறந்த ஆலோசனைகளைச் சொல்லி நம்மை உற்சாகப் படுத்தினதற்காக நாம் மிக்க மகிழ்ச்சி எய்தியுள்ளோம், முதியோர் கல்வியின் முன்னேற்றத்திற்காக அவர் கொண்ட முயற்சி ஒப்பற்றது. தம் உடல் நலத்தைக் கவனியாமல் திரு. கே. மாதவ மேனன் இங்கு வந்து இம் மகாநாட்டில் கலந்து கொண்டதற்காக நாம் மிகவும் நன்றியறிதலுடையவர்களாயிருக்கிறோம். மேலும் திரு. ரோச் விக்டோரியா அவர்கள் இல்லாமல் முதியோர் கல்வி மகாநாடு பூர்ணமடையாது. ஏனெனில் அவரே நம் தலைவரும் முதியோர் கல்வி இயக்கத்தின் பிதாவும் ஆவார் எனக் கூறலாம். அவரது இடையறாத உழைப்பால் இவ்வியக்கம் இவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது.

இங்கு வந்திருக்கும் எல்லா ஊழியர்களையும் நான் அன்புடன் வரவேற்கிறேன். அரசியல் பொருளாதார நிலைமையின் நெருக்கடியான காலத்தில் முதியோர் கல்வியின் அவசியத்தை அதிகமாய் உணர்ந்து வந்திருக்கிறோம். கல்வி மக்களுக்கு மிகவும் அவசியம். ஆனால் முதியோர் கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பது பணக் குறைச்சலேயாகும். அரசாங்கமானது செலவில் பாதி பணத்தை ஏற்றுகொள்ளுமாகில் மற்றப் பாதியைப் பொது மக்கள் ஏற்கத் தயங்கார்.

மேன்மைதங்கிய கவர்னரின் உரை

நண்பர்களே,

சென்னை மாகாணத்தில் முதியோர் கல்வியைப் பற்றிப் பலமுறை பேசியிருக்கிறேன்; மேலும் அதன் முன்னேற்றத்தையும் மிக்க கவனமாகக் கவனித்து வருகிறேன். ஓர் ஆண்டுக்குமுன் முதியோர்

கல்வியின் அவசியத்தைப் பற்றியும் அதனால் படியாத நம் மக்கள் கல்வி கற்று தங்கள் உரிமையை நன்றாய் உணருவார்கள் என்றும் வற்புறுத்திப் பேசினேன். சிலநாட்களுக்கு முன் சென்னையில் ஒரு மகாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது கிராம மக்களோடு எவ்வாறு நெருங்கிப் பழகி காரியங்களைச் சாதிப்பது என்பதைப் பற்றி உணர்ந்து பேசினேன். அதுவே நான் முதல் முறையாக பல ஜில்லாக்களின் ஊழியங்களைப்பற்றி அறிய ஏதுவாயிற்று.



ஒவ்வொரு ஜில்லாவிலும் ஊழியர்கள் மிக்க ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் உழைக்கவேண்டியது அவசியமாகிறது. சில இடங்களில் இவ் ஊழியம் நன்றாய் நடைபெறவில்லை. சில இடங்களில் நன்றாய் நடைபெற்று வருகிறது. ஆகவே நாம் முதலில் மக்களின் திறமைகளையும் ஊக்கத்தையும் அறிந்து அதற்குத் தக்கவாறு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து சேவையில் வெற்றி காணவேண்டும். இச் சேவைக்காக ஜில்லா உயர்தர உத்தியோகஸ்தர்களும் உயர்பதவி வகிக்கும் பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டும். பல சகோதரிகளும் இவ்வியக்கத்தில் பங்கு பெறுதல் வெற்றியளிப்பதாகும்.

இரண்டாவதாக இடையறாத உழைப்பு. நமது ஊழியர்கள் முதலில் மிகச் சிறப்பாகக் கடமைகளைச் செய்யத் தொடங்குகிறார்கள்; பின்னர் எல்லாம் மங்கிப்போகிறது. சாதாரணமாக முதலில் நாம் மக்களுக்குக் கொஞ்சம் கற்றுக்கொடுத்துவிட்டால் பிறகு அவர்கள் கேட்டதையும் கற்றதையும் மிக எளிதில் மறந்துவிடுவார்கள். என் அனுபவத்தில் நான் அவ்வாறு கண்டிருக்கிறேன். ஆதலால் நாம் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துகொண்டு முறையாக மிக்க கவனத்தோடு ஊழியத்தை நடைபெறச் செய்யவேண்டும். எண்ணிக்கையிலே நாம் மகிழ்ந்துவிடக்கூடாது. ஆகவே கொஞ்சங் கொஞ்சமாக இடைவிடாமல் முறையாக நடத்திவருவோமானால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். இல்லாவிடில் மறுபடியும் அறியாமையையும், மடமையையும் அடைய நேரும். அதனால் ஸ்தல ஸ்தாபக ஊழியர்கள் சிறந்த முறைகளை முன்னமே வகுத்துக்கொண்டு ஒரு ஜில்லாவில் ஊழியம் செய்யவேண்டும். இதையே நீங்களும் கைப்பற்றுவீர்கள் என்று நம்புகிறேன் வணக்கம்.

திரு. ஜே. எல். பி. ரோச் - விக்டோரியா அவர்களது தலைமை உரை

முதலாவதாக மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் இம் மகாநாட்டைச் சிறப்பித்ததற்காக நான் வணக்கம் செலுத்துகிறேன். மேலும் அவர் முதியோர் கல்வியில் மிக்க சிரத்தை கொண்டிருக்கிறார். திரு. மாதவ மேனன் அவர்களையும் நான் இங்கு வரவேற்கிறேன். ஏனெனில், இவ்வியக்கத்தின் சகல காரியங்களிலும் கண்ணும் கருத்துமாயிருந்து தக்கபடி நடைபெறச் செய்து வருகிறார். கடந்த இரண்டு முதியோர் கல்வி வாரக் கொண்டாட்ட வெற்றிக்கும் காரணம் இவரே.

அன்றியும் ஏப்ரல் மாதம் சென்னை அடையாரில் நடந்த பிறகு உடனே இம் மகாநாடும் நடைபெறுவதால் இதை நான் மிகவும் சிறந்ததாகக் கருதுகிறேன். நடந்தேறிய மகாநாடு இந்திய அரசாங்கத்தின் ஆதரவிலும் நன்கொடையாலும் சிறப்பாக நடந்தேறியது. அவர்கள் கொடுத்த நன்கொடை ரூ. 5000 இந்திய அரசாங்கத்தின் கல்வி இலாகா கூட்டுக் காரியதரிசி பேராசிரியர் ஜனப் ஹுமாயூன் கபீர் அவர்கள் ஆதரவைப் பெற்றது. அவர் பேசுகையில், "கல்வியை அடக்கிவைக்க முடியாது. கல்வி மிக்க பயனளிக்க வேண்டுமாயின் எல்லாச் சமூகத்தினருக்கும் அதன் அவசியத்தை உணரச் செய்தல் வேண்டும். பல வழிகளில் பல வித்தியாசங்கள் இருப்பினும் கல்வி என்பது சமூகத்தின் உயிர் நாடியாயிருக்கிறது" என்றனர்.

திருமதி எல்லா கிரிப்பன் அவர்கள் உலகத்தின் பிற்பாக அனுபவங்களை எடுத்துரைத்துப் பேசினர். அதனால் பல சீர்திருத்தங்கள் செய்ய ஏதுவாயிருந்தன.

தென்னிந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து நான்கு மொழிக்காரரும் கூடிவந்து தங்கள் அனுபவங்களையும் கருத்துக்களையும் எடுத்துப் பேசியது மிக்க போற்றத்தக்கதேயாகும். மேலும் இத்தகைய மகாநாட்டில் ஆழ்ந்து சிந்திக்கையில் முதியோர் கல்வி தென்னிந்தியா முழுமையும் மிக விரைவில் பரவ வேண்டியதா யிருக்கிறது.

இனி பற்பல கமிட்டியினரால் தீர்மானிக்கப்பட்ட காரியங்களைக் கூறுகையில் ஒன்று இரண்டு மிக அவசியமான குறிப்புக்களைச் செய்ய விரும்புகிறேன். அதாவது முதியோர் கல்வி வகுப்பு, ஸ்தாபனம், சமூக ஸ்தாபனம், இவற்றை ஸ்தாபிப்பதுடன் இவற்றை நடத்துவதில் அதிக ஊக்கம் காட்டவேண்டியதா யிருக்கிறது. அவ்வாறே பணச் செலவு செய்வதும் அவசியம். இன்னும் உத்தியோகஸ்தர்களும் வேறு பல ஊழியர்களும் ஒன்றுபட்டு உழைப்பது மிக அவசியமாகிறது. இவ்வாறு ஒத்துழைப்பில் ஹுமாயூன் கபீர் அவர்கள் கூறியவண்ணம் தென்னிந்தியாவில் முதியோர் கல்வி எல்லாத் துறைகளிலும் மிக உன்னத நிலைமையை பெறும் பல பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் உதவி செய்யவேண்டும். பல மாகாநாடுகள் கூட்டப்பெறினும் இன்னும் சிலர் முதியோர் கல்வி இயக்கம் வீண் செலவு, காலத்தை வீணாக்குதல், உழைப்பும் வீண் என்று குறை கூறிக் கொண்டே இருப்பதைக் காண்கிறோம். ஆனால் குறை கூறும் மக்கள் முதியோர் கல்வி ஸ்தாபனம் ஒரு கட்சியைச் சார்ந்தது அன்று என்றும் மதச்சார்பற்றது என்றும் தேசிய இயக்கம் என்றும் அறியாதிருக்கிறார்கள். என்பதே வருந்தத்தக்கதாகும். மேலும் குறை கூறுவோர் இவ்வியக்கத்தின் முன்னேற்றத்திற்காக நன்முறைகளைக் கூறின் உடனே அவற்றை எற்றுக்கொள்வோம். தவறிய வழியில் குறை கூறுவோரைப்பற்றி நாங்கள் சிறிதும் சிந்திப்போம் இல்லை. அரசாங்கத்தாராலும் பொது மக்களாலும் கொடுக்கப்பட்ட பணத்திற்குரிய வரவு செலவு கணக்குகள் அவ்வப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. இவை யாவும் இவ்விஷயத்தின் முன்னேற்றத்திற்கே செலவு செய்யப்பட்டன.

பொதுமக்கள் நன்மைக்கு எற்றவாறு உத்தியோகஸ்தர் எதையும் தங்கள் அதிகாரத்தோரணையில் நடத்தாமல் மிக்க விரைவில் இவ்வியக்கம் முன்னேற்றமடையத்தக்கதாய் உழைப்பார்கள் என்று நம்புகிறேன். இன்றும் இம் மகாநாட்டைச் சிறப்பிக்கத் தக்கதாய் வந்து கலந்துகொண்ட எல்லாப் பெரியோர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. மாதவ மேனனின் அறிவுரை

தலைவரின் வேண்டுகோளின்படி மாதவ மேனன் சொற்பொழிவு ஆற்றத்தொடங்கி, “முதியோர்



கல்வி இயக்கத்தைப்பற்றிக் குறை கூறுவோர் சாதாரணமாக அரசாங்கமானது கோடிக்கணக்காக ரூபாயை ஆரம்பக் கல்விக்குச் செலவழிக்கிறது என்றும் ஆயி

னும் 38 சத விகிதமே பள்ளிக்கூடப் பிள்ளைகள் கொண்டுவரப்படுகிறார்கள் என்றும் அதனால் கல்வி யறிவில்லாதவர்கள் 65 சத விகிதம் இருக்கின்றனரே என்றும் கூறி வருகின்றனர். உண்மையாகவே அரசாங்கம் மாத்திரம் இந்தச் சேவையில் பங்கு பெறுவதால் எல்லாம் பூரணப்படும் என்று கருதுவது மிகத் தவறாகும். ஏனெனில் பொது ஜனங்களே இதை நடத்தி வெற்றிபெறச் செய்யவேண்டியவராவர். படித்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இச் சேவையில் பங்கு பெற உரிமை உண்டு. இந்தியா பூரணமாகக் கல்வி யறிவு பெறும்வரை இடைவிடாமல் உழைப்பது மிக மிக அவசியமாகும்.

முதியோர் கல்வி கற்பதில் மட்டுமன்று உலகில் நடைபெறும் அரிய விஷயங்களையும் உணர்ந்து நாட்டின் நலன் இன்னதென்று அறிதல் வேண்டும். இந்தியாவில் பொதுத் தேர்தல் விரைவில் நடைபெறும். முதியோர் கல்விப் பெருக்கம் பெரிதும் அதைப் பொருத்திருக்கிறது. இப்போது தேர்தலுக்கு ஜனங்களின் எண்ணிக்கையே அதிக பொறுப்பேற்று இருக்கிறது. மேலும் தகுதியான ஆள் தேர்ந்தெடுக்கப்பட்டால் நாட்டிற்கு நலன் விளையும். அதற்காகவே முதியோர் சமூகக் கல்வி சங்கத்தார் அவர்களுக்கு ஏற்றவாறு கற்பிக்கவேண்டும்.'' இவ்வாறு பேசி முடிவில் இரண்டு அல்லது மூன்றாவது தேர்தலுக்குள் முதியோர் கல்வி மிக்க உச்ச நிலையைப் பெறும் என்று கூறி முடித்தனர்.

ஸ்ரீமதி ஆல்சன், அமெரிக்கா தேசத்தில் முதியோர் கல்வி நடைபெறும் முறையை எடுத்து விளக்கிக் கூறினார்.

நீலகிரி ஜில்லா முதியோர் கல்விச் சங்கக் காரியதரிசியாகிய திரு. வி.பி. ராமசாமியும், கோயம்புத்தூர் ஜில்லா முதியோர் கல்விச் சங்கக் காரியதரிசி திரு. யோ. இராஜநாயகமும் தங்கள் தங்கள் இடங்களில் நடைபெறும் காரியங்களைப்பற்றிய அறிக்கை வாசித்துக் காட்டினர்.

பின்னர் திரு. வி. டி. டைடஸ், திரு. ஒய். பி. பெல்வி கௌடர், திரு. எஸ். ஆர். நாராயண அய்யர், திரு. கே. எஸ். ராமசாமி சாஸ்திரி, தமிழ்நாடு முதியோர் கல்வி ஸ்தாபகரும், தென்னிந்திய முதியோர் கல்வி சங்கத் தலைவரும், மற்றும் பிறரும் பலபடப்பேசினர்.

முடிவில் திரு. டி. ஜே. ஆர். கோபால், தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்து ஸ்தாப காரியதரிசி அவர்கள் பேசுகையில், "முதியோர் கல்வி இயக்கமானது தேசிய முயற்சியே அன்றி ஒரு கட்சியையோ ஒரு சமுதாயத்தையோ ஒரு சமயத்தையோ சார்ந்ததன்று. ஏழையோ, பணக்காரனோ, உயர் உத்தியோகஸ்தனோ, தாழ்ந்த ஊழியனோ எவராயினும் சரி, யாவருக்கும் ஏற்ற அளவில் அவரவர் ஊழியம் செய்யத் தக்கதாய் அமைந்துள்ளது. கவர்னர் அவர்கள் கூறியவண்ணம் யாவரும் ஒத்துழைத்தால் அன்றி இவ்வியக்கம் முன்னேற்றமடைவது அரிதாகும். ஆகவே பொது மக்கள் இதில் மிக்க ஊக்கம் செலுத்தவேண்டியதாகிறது'' என்றார்.

தீர்மானங்கள்

மிகச் சிறப்பாக நடந்தேறிய அடையார் அரங்குக்கு வாழ்த்து, நாட்டில் முதியோர் கல்வி மிக்க பலமாய் நடைபெறத் தக்கதாய் ஒழுங்குபடுத்திய தீர்மானங்கள், முதியோர் கல்வி ஸ்தாபனத்தைப் பொது ஜனங்களுக்கு விட்டுவிட அரசாங்கத்தை வேண்டுதல்; பயிற்சி பெற்று முதியோர் கல்வி ஸ்தாபனங்களை நடத்துபவர்களுக்கு அங்கீகாரம் அளித்தல்; பொதுவாக நடைபெறும் முதியோர் கல்விப் பயிற்சிக் கூட்டங்கள்; முதியோர் கல்வி ஸ்தாபனங்கள் ஏற்பட ஒரு மாதிரிப் பள்ளியை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொன்று ஸ்தாபிக்கும்படி தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தை வேண்டுதல்; ஒவ்வொரு ஜில்லாவிலும் அவசியமான இடங்களில் முதியோர் கல்விப் பயிற்சி அளிக்கும் ஸ்தாபனங்கள் நிறுவச் செய்தல்; கோயம்புத்தூர், நீலகிரி ஜில்லாக்களிலுள்ள தொழிற்சாலைகளிலும், சங்க ரப்பர், டீ தோட்ட தொழிளாளர்களும் முதியோர் கல்வி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி மிக விரைவில் யாவரும் படிப்பறியத் தக்கதாகச் செய்தல்; தொழிற் சங்கம் முதியோர் கல்வி ஸ்தாபனங்களை வைத்து நடத்தும்படி வேண்டுதல்; பயிற்சி பெறவரும் ஆசிரியர்களுக்கு சம்பளம் ரூ. 15-ம் இதர செலவுகள் ரூபாய் 5-ம், பயிற்சி பெறுதவர்க்கு ரூபாய் 10 ம் ரூபாய் 5-ம் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டுதல்; எலிமெண்டரி ஸ்கூல் பரிட்சைக்குப் போகும் மாணவர்களை ஆயத்தப்படுத்தும் ஆசிரியர்களுக்கு பிரத்தியேக சம்பளம் அளிக்கவேண்டும் என்று அரசாங்கத்தை வேண்டுதல்; மாகாணத்திலுள்ள எல்லா முதியோர் கல்வி ஸ்தாபனங்களுக்கும் வாசிக்கத் தகுந்த புத்தகங்களை இலவசமாக அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டுதல்; தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம் ரயில்வே அதிகாரிகளிடமிருந்து முதியோர் கல்விப் பிரசார ஊழியர்கள் ரயில் பிரயாணம் செய்ய சலுகைபெற வேண்டுதல்; தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம் தமிழ் நாட்டைச் சுற்றுப் பிரசார வேலை செய்ய ஒரு குழுவினரைத் தேர்ந்தெடுத்தல்; சென்னை அரசாங்கத்தார் எல்லா இடங்களிலும் கல்வி அபிவிருத்தியைப் பரவச் செய்யச் செய்தல்; இறுதியாக தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கம் ஒரு ஜில்லா ஸ்தல ஸ்தாபகரை ஏற்படுத்தி அவர்மூலம் முதியோர் கல்வி முயற்சி நடைபெறச் செய்ய வேண்டுதல் முதலியன.

முதியோர் எழுத்தறிவு இயக்கம் ஏன்?

(அடையாறு G. வில்வராய்)

நம் நாட்டில் தற்குறிகள் 100-க்கு 85 பேர். இந்த தாழ்ந்த நிலையில் உண்மைக் குடியரசு சாத்தியமாகாது. இன்று இதன் உண்மையை நாமனைவரும் உணரவேண்டும்.

முதலாவதாக, பாமர மக்களது எழுத்தறிவில்லாக் குறையால் பிறர் உதவியை தினம் நாடும் அடிமை மனப்பான்மை தொன்று தொட்டு இன்றும் நம் நாட்டில் வளம்பெற்றிருக்கிறது. தினசரி வாழ்க்கையில் இவ்வாறு அடிமைத்தனத்திலே ஆழ்ந்துகிடக்கும் மக்கள், தம் நாட்டு விடுதலையாகிய பெரிய சுதந்தரத்தை உள்ளம் உணரவோ, நீடித்து அநுபவிக்கவோ சக்தியற்றவர் ஆவர். இந்த கேவல நிலை விரைவில் அறவே நீங்கவேண்டும்.

இரண்டாவதாக, எழுத்தறிவில்லா மக்களிடையே எவ்வித முற்போக்கான ஏற்பாடும் உண்மையில் நிலையாது. 'உணவு அதிகப் பயிர் செய்' (Grow more food) எனும் இன்றைய சூக்குரலை எடுத்துக்கொள்வோம். இதனைவிட 'முழு அளவும் பயிர் செய்' (Grow more food) என்பது நாகரிகமான கொள்கையாகும். முழு பலன் காண கூட்டுப் பண்ணை அவசியம். ஆனால் கூட்டுப் பண்ணை தற்குறிகள் வசம் ஒரு சிறிதும் ஓங்காது. இவ்விதமே இதர முற்போக்கான பெரிய தேசீய திட்டங்களும் நம் தற்குறி மக்களிடம் தழைத்தோங்கத் தடைபட்டு சிதைந்துபோவது திண்ணம். வேர் கொள்ளாது.

முதியோர்க்கு எழுத்தறிவு ஏன்? பொது அறிவு போதாதோ? அந்நாளில் முகம்மது நபி, அக்பர், அசோகர் முதலானோர் எழுத்தறிவின்றியே வாழ வில்லையா? உத்தமர்களாக விளங்கவில்லையா? என்னும்படியான கேள்விகள் சிலருக்கு உதிக்கலாம். நபி நாயகம், அசோகர், அக்பர் முதலிய பெரியோர்கள் அபார ஞாபக சக்தி பெற்றவர்கள். அவர்கள் உயர்ந்த சீலமுள்ள நம்பத்தகுந்த எழுத்தாளர்கள் பலரது உதவி கொண்டு தம் காரியங்களை நடத்தினர். இன்னாளில் எழுத்தறிவில்லா எளியோனுக்கு இத்தகைய பெரும் வசதிகள் ஏது? அக்காலம் வேறு. இக்காலம் வேறு. ஆகவே அத்தகைய கேள்விகள் பயனற்றவையாகும்.

'கிராமத்தினர் எழுத்தறிவின்றியே ஒருவர் செய்வதைப் பார்த்துத் தாமும் தம் முன்னேற்ற காரியங்களைச் செய்து முடிக்கலாகுமே. அப்படியிருக்க முதியோர் எழுத்தறிவு இயக்கம் அவசியம்தானா' என சிலர் எண்ணலாம். இதனை ஆலோசிக்கலாம். மருத்துவ மாணவர்கள் வாசிக்கத் தெரிந்தவர்களாயிருப்பினும், ரண சிகிச்சை (Operation) செய்யுமுன் ஒரு ரண சிகிச்சை செய்யும் நிபுணர் அதைச் செய்து காட்ட, அதன் பின்னரே தாம் அதைச் செய்கின்றனர். ஆகவே மருத்துவ மாணவர்களுக்கு எழுத்தறிவு அவசியம் அல்ல என்று முடிவு கட்டி விடலாமா? தற்குறித் தம்பிரான் ஒருவன், ஓர் நிபுணரைப் பார்த்து அபிநயித்துச் செய்து முடித்த ஒரு ஆராய்ச்சியற்ற தன் காரியத்தைப் போற்றலாமா? இது உண்மைப்பயனாகுமா?

ஒருவர் தம் வீட்டிலிருந்து ரயில் ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டும். ஒருவன் அவரது கண்களைக் கட்டி ஒரு கோலின் ஒரு முனையைப் பிடித்துக்கொள்ளும்படி சொல்லி, மற்றொரு முனையை அவன் பிடித்துக்கொண்டு, அவரை ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் விடுகிறான். விரும்பிய இடத்தை அடையவேண்டியதே அவரது நோக்கம். விரும்பிய இடத்தையே அடைந்து விட்டார். ஆகவே இந்த ஏற்பாடே போதுமானதென நாம் அகமகிழ்ந்து விடக்கூடுமோ? அவரது கண் கட்டை அவிழ்த்து ஸ்டேஷனுக்குப் போகும் வழியைக் காட்டி விட்டால் அவர் தானாகவே விரும்பிய இடத்தை அடைந்திருப்பார் அல்லவா? அதுவே நாகரிகமான முறையாகும். கண் திறந்து பலன் அடைவதே அறிவு. நாட்டின் உண்மை முன்னேற்றத்திற்கும் அதுவே உகந்த வழி. கண் மூடிச் செயலெல்லாம் மண் மூடிப் போகவேண்டும். கண்ணிருந்தும் குருடராய், வாழ்க்கையில் வழி தெரியாது மோதி, தாக்குண்டு, சாவதற்கு

முன் பல முறை செத்து, அல்லல்படும் ஏழை மக்களுக்கு, எழுத்தறிவெனும் கண்ணைத் தந்து, எழுத்தறிவின்மையினின்றும், சுதந்தர மளிப்போமாயின் அவர்கள் தாமாகவே ஏனைய சுதந்தரங்களை நாடி அடைவார்கள்.

மற்றும் சிலர், நம் நாட்டில் அனைவரும் எழுத்தறிவு பெற்றே தீரவேண்டும் என வீர கர்ஜனை செய்கின்றனர். ஆனல் அந்த உன்னத நிலை ஆரம்பப் பள்ளி மூலம்தான் ஏற்பட வேண்டுமென உறுதி கூறுகின்றனர். முன்னேற்றமடைந்த மற்ற நாடுகளின் முற்போக்குச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் அந்நாடுகள் தம் முதியோர்களுக்கு ஒரு காலத்தில் நேரே தீவிர முறையில் எழுத்தறிவு புகட்டியிருப்பதாக விளங்குகின்றது. அவை அப்படிச் செய்யத் தவறியிருந்தால் அவைகளின் முற்போக்கு பிற்போக்காகியிருக்கும். இந்த சரித்திர உண்மையை நம் நாடுமாத்திரம் புறக்கணிப்பது அவசியமா? யுக்தமா?

இன்னும் சிலர், 'முதியோர் எழுத்தறிவு' பேனக்கத்தியைப்போன்றது. பழமும் கொய்யலாம் கழுத்தையும் அறுக்கலாம். ஆபத்தானது வேண்டவே வேண்டாம்' என்கின்றனர். இந்த அறிஞர்களுக்கும், கிராமத்தில் தன் ஐந்து வயதுள்ள மகளை பள்ளிக்கனுப்பக் கேட்கப்படும்போது, "அப்பப்பா! பெண் படிப்பு பேனகத்தியைப் போன்றது வேண்டவேவேண்டாம்" என்று பதிலளிக்கும் எழுத்தறிவற்ற பேதைக்கும் வித்தியாசமில்லை.

முதியோர் எழுத்தறிவால் ரத்த ஆறு பெருகலாமென இரண்டொருவர் மேடைமீதும் பேசலாயினர். எழுத்தறிவில்லா முதியோர்கள் செம்மறியாட்டு மனப்பான்மையைக் கொண்டு, சுய அறிவற்றுப்போவதே அந்த பயங்கர நிலைக்கு ஆதாரமாகும். முதியோர் எழுத்தறிவு, கலகங்களைத்தடுக்கும். பெருக்காது. எழுத்தறிவில் முடிவுகண்ட பிற நாடுகள் பல. அங்கே அமைதியும், குடிகளின் சுகமும் ஒருங்கே காணப்படுகின்றன. டர்க்கியைப் பாருங்கள்! குடியரசு நிலைத்தோங்கும் அமெரிக்காவைப் பாருங்கள்! உலகெலாம் பசிப்பிணி ஊசலாடும் இன்னளில், பசியற்று சுகித்துவாழும் ரஷியாவைப்பாருங்சள்! முதியோர் எழுத்தறிவே இன்னடுகளின் உன்னத நிலைக்கு அடிப்படை.

முதியோர் எழுத்தறிவு இயக்கம், ஆரம்ப பாடசாலையின் பலனைப் பூர்த்தி செய்வதாகும். ஆரம்பப் பள்ளியில் சேர்ந்தும் எழுத்தறிவு பெருது நீங்கிய நிர்பாக்கிய சாலிகளை இந்த இயக்கம் எழுத்தறிவு பெறச்செய்யும்.

பட்டணவாசிகள் சிலர் "முதியோர்களுக்கா எழுத்தறிவு வேண்டும்? இதெல்லாம் 'நான் ஸென்ஸ்' (Non-sense)" என்று ஒரே அடி அடித்து விடுகிறார்கள். அவர்களுக்கு என் தாழ்மையான வணக்கம். இப்படிப்பேசி முடிக்கும் அறிஞர் திடீரெனதான் எழுத்தறிவற்றதாக ஒரு நிமிஷம் நினைத்துப்பார்க்கக் கோருகிறேன். இந்த ஒரு நிமிஷ நினைவு உலகத்தில் எழுத்தறிவற்றதன் பயனைத் தன் வாழ்க்கை நிலை எங்கெந்த விதங்களில் மாறுதல் அடைந்துவிடும்! எந்த அளவிறகு தாழ்ந்துவிடும்! தன் பேனு பிடித்தெழுதும் சுதந்தரமும் அதன் அழகும் அதிகாரமும் இந்த நிமிஷம் எங்கேபோயிற்று? எழுத்தறிவால் தனக்கு இன்பமாகயிருந்தது. எழுத்தறிவில்லாததால் தனக்கு இந்த நிமிஷம் வாழ்க்கையே துன்பமாக விளங்குகிறது. மற்ற முதியோர்களுக்கும் ஏன் இந்த இன்பம் கூடாதென்றுதான் இந்த அறிஞர்களைக் கேட்க விரும்புகிறேன்.

எழுத்தறிவுள்ள சகோதர சகோதரிகளுக்கு ஒரு விண்ணப்பம். பெரிய சுதந்தரம் அனுபவிக்கப்போகும் இந்நாளில் நாம் அடிமைத்தனத்திற்கு அடிப்படையான முதியோர் எழுத்தறிவின்மையை நம் நாட்டிலிருந்து அறவே ஒழிப்போமாக. எழுத்தறிவுள்ள அனைவரும் திரண்டுவாருங்கள்! எழுத்தறிவற்றவர்களுக்கு ஆளுக்கொருவராக எழுத்து கற்பியுங்கள்! 40 நிமிஷத்திலேயே வாக்கியம் படிக்க ஆரம்பித்துவிடலாம். 40 நாட்களில் எடுத்த புத்தகம் படிக்கலாம். புதிய முறைகள் வந்துவிட்டன. தென்னிந்திய முதியோர் கல்விக் கழகத்திற்காகிலும் (2/21, முதல் லயன் பீச் ரோடு, மதராஸ் 1.) எழுதி வழியறிந்து இந்த புனிதமான தேச சேவை புரிவீர்களாக!

வீதிக்கோர் சங்கம் நிறுவி வீடுதோறும்

"முகத்திரண்டு கண்ணுளரே யன்றி
புண்ணுடையோர் இங்கு யாருமிலர்"

என்று குதூகலிக்கச் செய்யுமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்,

‘முதியோர் கல்வி’

(மதுரை T. R. ராகவன்)

வீழ்க கல்வியின்மை !! **வாழ்க கல்வி !!**

பார்க்குமளவு மட்டும் பரந்து கிடக்கின்றன பசுமையான பயிர்கள். ஆனால் அதை நன்முறையில் பக்குவபடுத்தி, சிக்கனபடுத்த வேண்டிய அறிவுதேவை.

செல்வம் செழித்து ஒருவரிடம் குவிந்து இருக்கலாம். அதை சரியான வழியில் செலவிட நல்ல மனப்பான்மைகொண்ட அறிவு அவசியம்.

காவியங்கள், கட்டுரைகள், நாவல்கள் எழுத ஆவல் இருக்கலாம். இம் மனப்பான்மையை பூர்த்திசெய்ய கவர்ச்சி தரக்கூடிய வகையில் எழுத அறிவு மிக்க அவசியம்.

விஞ்ஞானிகள், பெரியோர்கள் நூதன சாதனங்களை பல கண்டுபிடித்து மக்களிடம் கொடுப்பினும் அது சில சமயங்களில் பயனற்றுப் போவது மக்களின் கல்வி யறிவின்மையால்.

ஆகாயத்தில் நக்ஷத்திர, சந்திர விண்மீன்கள் சஞ்சரிப்பினும் மேகங்கள் வந்தவுடன் மறைந்து விடுகிறது. இதுபோல் மக்களிடம் சிறிது அறிவு இருப்பினும் கோபம் வரும் காலத்தில் தன் சிந்தனை சக்தியை உபயோகப்படுத்த முடியாமல் பயனற்றுப் போகின்றது. கடல்போன்று பரந்து விரிந்து கிடக்கும் பல்லாயிரக் கணக்கான கிராமங்களைக் கொண்ட நம் பாரத நாட்டில் 87 சதவிதம் எழுதப் படிக்கத் தெரியாதவர் என நினைக்கும்போது உள்ளம் உருகுகிறது. இதற்குக் காரணம் கல்வி கற்றுக்கொண்டவர்களாகிய நாம் தான். நாம் ஏன் அவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை பற்றி விளக்கவில்லை கல்வி யறிவு படைத்த பலர் தாம் கற்றுக்கொண்டதின் பலனை அடைய முயற்சிக்காமல் தாம் படித்ததனால் மற்றவர்களை (கல்வி யறிவு இல்லாதவர்களை) வஞ்சித்து கஷ்டப்படுத்துவதும், அரசியல் கட்சிகளில் சிக்கவைப்பதும் ஆகிய வேலைகள் செய்கின்றனர். இவர்கள் கல்வி கற்றிருந்தும் கல்வி யறிவு இல்லாத மூடர்கள் போல் நினைக்கவேண்டியிருக்கிறது. நம் நாட்டில் பிறந்த அனைவரும் நம் சகோதரர்கள் என நினைக்கவேண்டும்.

கல்வி என்பது என்ன ?

பல பாஷைகளை கற்பதும், பலரிடம் பேசுவதும் கல்வி அல்ல. தன் சுயநினைவைக் கொண்டு இன்னது செய்கிறோம் என்று தெளிவு படுத்திக்கொண்டு அதற்கு ஏற்றவாறு நடப்பதே கல்வியாம்.

முதியோர் கல்வி என்பது யாது ?

எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வது தன் அறிவு அபிவிருத்திக்காக கருத்துமிக்க நாடகம், ஒலிபடக் காட்சி, ரேடியோ, சொற்பொழிவு ஆகியவை பார்த்தலும், கேட்டலும் ஆகும். இங்கு வயதுவந்த முதியோர்கள் (கிழவர்கள்) முதியோர்எனக் கருதப்படுவதில்லை. ஒருவர் ஆரம்ப பாடசாலைக்கு செல்லக் கூடிய (அனுமதிக்கக்கூடிய) வயதுவரை செல்ல முடியாததாலும் அல்லது சென்று தன் வறுமையினால் இடையில் பள்ளியை விட்டு தொழில்செய்து ஊதியம் பெற்றுவருங் காலத்தில் கல்வி அறிவு தொடர்பில்லாமல் கல்வி மறந்து அதனால் ஏற்படும் கஷ்டங்களை உணர்ந்து அக்கஷ்டத்தை நீக்கிக்கொள்ள எழுதப் படிக்க, பொது அறிவு விஷயங்கள் ஆகியவை கற்றுக்கொள்வது முதியோர் கல்வியாகும்.

கல்வி அறிவு மறக்காமல் இருக்கச் செய்ய வேண்டியவைகள் :—

1. வாசகசாலை நிறுவி பொது அறிவு வளர்த்தல்.
2. குறிப்பிட்ட ஒரு விஷயத்தைக்கொண்டு விவாதத்தை நடத்தல் (இதனால் ஒருவருக்குத் தெரியாத விஷயம் மற்றொருவருக்கு தெரியவருகிறது. தன் சிந்தனை சக்தியும், பேச்சுத்திறனும், அச்சமின்மையும் ஏற்படுகிறது.)
3. நல்ல பிரசங்கிகளை அழைத்து கருத்து மிக்க விஷயங்களை எளிய முறையில் சொற்பொழிவாற்றுதல்.

கல்வியின் பயன்கள்

1. இதனால் மனிதனுக்கு மனிதன் உறவு ஏற்படுகிறது.
2. வருங்காலத்தையும், முற்காலத்தையும் பிணைத்துப்பார்க்க முடிகிறது.
3. தன் இனத்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் எனவும் வம்ச பரம்பரை பற்றி விஷயங்கள் தெரிந்து கொள்ள முடிகிறது.
4. தெளிவுடன் யோசனைசெய்யும் திறமையும், சிந்தனை சக்தியும், மற்றவர்களுடன் சுமுகமான உறவு ஏற்படுத்திக்கொள்ளும் சுபாவமும் ஏற்படுகிறது.

“ஜெய் பாரத்”

பஞ்சாயத்துகளும் முதியோர் கல்வியும்

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

முதியோர் கல்வி இக்காலத்தில் மிகவும் இன்றியமையாதது என்ற உண்மை யாவருள்ளத்திலும் நம்முடைய நாட்டில் பரவி இருக்கின்றது. நம்முடைய நாட்டில் எழுத்தறிவு உள்ளவர்கள் 15 சதவிகிதம்தான் இருக்கிறார்கள். ஆரம்பக் கல்வியே எல்லாச் சிறுவர்கள் சிறுமிகளுக்கும் பரவவில்லை. ஆரம்பக் கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் எல்லாச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் ஏற்பட வேண்டும். அப்படி இன்னும் எற்படவில்லை. மொத்தத் தொகையில் பாதிச் சிறுவர்கள் சிறுமிகள்கூட எழுத்தறிவைப் பெறவில்லை. எழுத்தறிவை அடையாத சிறுவர்கள் சிறுமிகள் நாளடைவில் கல்வியற்ற முதியோர்களாய் விடுகிறார்கள். ஆனால் முதியோர் கல்வி முன்னேற்றத்தைக் கவனிக்காமல் இளைஞர் கல்வியைமட்டும் கவனிப்பதில் பயனற்ற காரியமாகவே முடிகின்றது. முதியோர் கல்வியற்றவர்களாக இருக்கும் குடும்பங்களில் அரசாங்கம் பணச்செலவினால் எழுத்தறிவைக கற்றுக் கொண்ட இளைஞர்களும் எழுத்தறிவை மறந்துவிடுகிறார்கள். இப்படி வழுக்குமரம் உரியடியில் ஏறுவதுபோல் நம்முடைய நாட்டில் கல்வி ஒரு அடி ஏறுவதும் ஒருமுழம் சருக்குவதுமாக இருக்கிறது.

சுதந்திர இந்தியாவில் 1950 ஜனவரி 26-ம் தேதி அமுலுக்குவந்த குடியரசு சட்டத்தில் 45-வது பிரிவின்படி 10 ஆண்டுகளுக்குள் 6 வயதுக்கு மேலும் 14 வயதுக்குள்பட்டுள்ள வாலிபர்கள் யாவரும் எழுதப் படிக்கத் தெரிந்து கல்வி யுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்ற திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 326-வது பிரிவுப்படி 21 வயது அடைந்த ஆண் மக்கள் பெண்மக்கள் யாவருக்கும் சட்டசபைகளுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்குரிமையுண்டு. ஆகையால் அரசாங்கம் தகுந்த பிரதிநிதிகளால் முறையாக ஒழுங்காக ஏற்பட வேண்டுமானால் முதியோர் கல்வி மிகவும் அவசியம். இளைஞர் கல்வி எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது முதியோர் கல்வியும் என்று நாம் நன்குணரவேண்டும்.

ஆகையால் மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் இப்பொழுது இந்த முயற்சிக்குப் பண உதவிசெய்து நடத்திவைக்க முன்வந்துள்ளார்கள். அநேக இடங்களில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் முதியோர் கல்வி போதனாமுறைப் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து பயிற்சி கொடுத்து வருகிறார்கள். பயிற்சி பெற்ற ஆசிரியர்களை முதியோர் கல்வி பள்ளிக்கூடங்களை நடத்தினால் அவர்களுக்கு மாதச் சம்பளம் 8 ரூபாய்களும் சில்லரைச் செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு 4 ரூபாய்களும் கொடுக்கிறார்கள். அத்தகைய பயிற்சி பெறாவிட்டாலும் சர்க்கார் அங்கீகாரம் பெற்ற முதியோர் கல்வி பள்ளிக்கூடங்களை நடத்தும் ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் 5 ரூபாய்களும் மாதம் ஒன்றுக்குச் சில்லரை செலவுகளுக்கு 3 ரூபாய்களும் கொடுக்கின்றார்கள். அவர்களுக்கு குறுகிய காலத்தில் விரைவில் பயிற்சியளிக்கும் பயிற்சி முறைகளை போதிக்க ஏற்பாடுசெய்து வருகின்றார்கள். சில நாட்களுக்குமுன் கடலூரில் 152 ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து பிறகு கனம் கல்வி மந்திரி கே. மாதவ மேனன் அவர்கள் பட்டமளிப்பு விழாவை நடத்திவைத்தார்கள். முதியோர் கல்வி பள்ளிக்கூடங்களில் முதியோர்களுககு எழுதப் படிக்கக் கற்றுகொடுத்தபிறகுக் கல்வி இன்ஸ்பெக்டர் பரிக்ஷைசெய்வார். எழுதப் படிக்க கற்றுக்கொண்ட ஒவ்வொரு முதியோருக்கும் ஒரு ரூபாய நன்கொடை (Bonus) ஆக ஆசிரியருக்கு அளிக்கப்படும்.

இதுதவிர சர்க்காரில் மோட்டார் வண்டிகள் (Vans) ஏற்பாடுசெய்து அவைகளில் அறிவாளிகள் சென்று சுகாதாரமுறைகள் கிராம முன்னேற்ற முறைகள் விஞ்ஞான விஷயங்கள் பொருளாதார அறிவு விஷயங்கள் அரசாங்க முறைகள் முதலிய நாகரீக அம்சங்களை கிராமவாசிகளுக்கு போதிப்பார்கள், சினிமாபடக் காட்சிகள் மூலமாயும் பூதக்கண்ணாடி (Magic Lantern) காட்சிகள் மூலமாயும் அறிவை வளர்க்க முயற்சி செய்யப்படும். பொதுமக்கள் நூல் நிலைய சட்டம் (Public Libraries Act) அமுலுக்கு வந்துவிட்டதால் கிராமங்களில் நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும் அவை

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்கவும்)

224726
சென்னை-600 008

வயதுவந்தோர் கல்வித் திட்டம்

(ஜனுப் ஹுமாயூன் கபீர்)

இந்திய அரசாங்கத்தாராலும் யூனஸ்கோவாலும் சேர்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட வயது வந்தோர் கல்வி சம்பந்தமான முதலாவது ஆசிய அரங்கு 1949-ம் வருஷம் மைசூரில் நடைபெற்றது. உலகில் அதிக விஸ்தீரணம் கொண்ட இப்பாகத்தில் நிலவியிருக்கும் எழுதப் படிக்கத் தெரியாமையை ஒழிப்பதற்கு ஒரு திட்டத்தை வகுக்க 20 ஆசிய நாடுகளும்,

ஜனுப் உமாயூன் கபீர்

இதர நாடுகளும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டன. எல்லா ஆசியா நாடுகளுக்கும் பொதுவான, கல்வி பிரச்னைகளைப்பற்றிய பொது விவாதம் அம் மகாநாட்டில் அவசியமான ஒரு முதல் நடவடிக்கையாக இருந்தது. குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு மட்டும் பிரத்யேகமாயிருக்கும் பிரச்னைகளைப்பற்றியும், அணுகவேண்டிய முறைகளைப்பற்றியும், தேசங்கள், பிரதேசங்கள் அடிப்படையில் மகாநாட்டில் விவாதித்து முடிவு செய்தால் அவைகளை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவந்து நடைமுறையில் பலன்கள் ஏற்படும்படி செய்ய முடியும். சென்ற மாரி காலத்தில் ஜபல்பூரில் ஒரு தேசீய கல்வி மகாநாடு நடைபெற்றது. இந்தியாவின் பிரதேச வாரியான முதல் கல்வி மகாநாடு தென்னிந்தியாவில் நிர்மாணிக்கப்பட்டது.

இவ்வேலையில் தென்னிந்திய வயது வந்தோர் கல்விச் சங்கம் தலைமை தாங்கி நடத்த ஏற்றுக்கொண்டது முறையானதாகும். இந்தியாவிலுள்ள பழமையான ஸ்தாபனங்களில் இதுவும் ஒன்று. தாங்களாகவே முன்வந்தும் உத்தியோக சார்பற்ற முயற்சியினாலும் இச்சஙகத்தார், பாமரமக்களிடையே கல்வியைப் பரப்புவதற்கு மிக பாடுபட்டு வருகிறார்கள். அச்சங்கத்தின் அஙகத்தினர்கள் தங்களுடைய சேவையை அபிவிருத்தி செய்துகொண்டதால் அங்கத்தினர்களிலிருந்து இருவரை கௌரவ ஆலோசகர்களாக சென்னைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

உலக அடிப்படையில் கல்விப் பிரச்னை

அச்சங்கத்தின் பொதுக் காரியதரிசியே இப்போதுள்ள மகாநாட்டின் டைரக்டராகவும், சென்னை மந்திரி சபையின் முக்கிய அங்கத்தினராகவும் இருக்கிறார். இவ்விதமான வயது வந்தோர் கல்வி மகாநாட்டுக்கு, உணவு மந்திரி டைரக்டராக இருப்பது மிகப் பொருத்தமானதாகுமென எனக்கு தோன்றுகிறது. அறிவு புகட்டுவதின் மூலமும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதின் மூலமும், மனித வாழ்க்கைக்கேற்ற நல்ல நிலைமையை உண்டாக்க, உலகில் பல்வேறு பாகங்களிலும் நடக்கும் வயது வந்தோர் கல்வி வேலை சாதகமாயிருக்கிறதென்று அனுபவத்தினால் தெரிய வருகிறது. ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை, சிறந்த விஷயங்களைச் சிந்தனை செய்தல் ஆகியவற்றைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும். அவ்வித எளிய வாழ்க்கை நடத்த குறைந்தபட்சத் தேவைப் பொருள்கள் தங்களுக்குக் கிடைக்குமென்று நிச்சயமாய் தெரியவேண்டும். வாழ்க்கைக்கு வேண்டிய குறைந்தபட்சத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் சிறந்த எண்ணங்களோ, கீழ்தரமான சிந்தனைகளோ ஒருவருக்கும் இருக்க முடியாது. முன்பு வயது வந்தோர்களுக்கு சாதாரணமாக எழுதப்படிக்க கற்றுக்கொடுக்கும் திட்டம் வற்புறுத்தப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது அதற்குப் பதிலாக வயது வந்தோர் வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திற்கும் தேவையான பூர்ணமான கல்வியைப்

புகட்டும் திட்டமே பிரதானமாயிருக்கிறது. எல்லா தீமைகளையும் போக்கடிக்க, எழுதப் படிக்கும் சக்தி சர்வரோக நிவாரணியாக இருக்கிறதென்று முக்கியமாக 19-வது நூற்றாண்டில் உணரப்பட்டது. நாட்டிலுள்ள எல்லா ஆண், பெண்களுக்கும் எழுதப்படிக்க போதித்தால் நாட்டிலுள்ள ஏழ்மை நிலைமை, நோய், அறியாமை ஆகிய பிரச்னைகள் மறைந்துவிடுமென்றும், சமூக சம்பந்தமான விஷயங்களில் அபிவிருத்தி ஏற்படுமென்றும், ஒவ்வொரு இனத்தார், கோஷ்டியார் ஆகியோருக்கிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகள் தீர்க்கப்பட்டுவிடுமென்றும், உலகிலுள்ள எல்லா ஆண்களும் பெண்களும் நினைத்தார்கள். 25 வருஷங்களுக்குள் ஏற்பட்ட இரண்டு உலக மகா யுத்த அனுபவங்கள் அவ்விதமான ஏமாற்றமளிக்கக்கூடிய பல எண்ணங்களை தகர்த் தெறிந்திருக்கின்றன. மக்களுக்குக் கல்வியிலுள்ள நம்பிக்கை ஒருபோதும் செத்து விடாது. ஏனெனில் மனிதன் கல்வியையே தன் நம்பிக்கையின் முடிவாக கருதுகிறான். பல நூதன சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாலும், உலகம் பூராவையுமே நூதன சாதனங்கள் மூலம் சீக்கிரமாக பார்க்க முடிவதாலும், உலகத்தின் விஸ்தீரணம் சுருக்கமாகிவிட்டது போல் இருக்கிறது. ஆகையால் கல்விப் பிரச்னையையும் உலக அடிப்படையில் கருதவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கல்வி என்பது எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதுமட்டுமில்லை யென்பது நன்கு உணரப்படுகிறது. உலக சமாதானத்திற்கு புகட்டப்படும் கல்வி மூலமே மனிதனைப் பயமுறுத்தும் எதிர்கால சண்டை சச்சரவுகள், ஆபத்து ஆகியவற்றைத் தடுக்கலாம்.

மக்களின் மனக்கலக்கத்தைத் தடுக்கவழி

இதனால் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்வது முக்கியமான தல்லவென்று கூறக் கூடாது. குறைந்தபட்ச அளவில் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டாலொழிய கல்வி பரிபூர்ணமாகவும் நிரந்தரமாகவும் ஆகாதென்பது உண்மை. எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளாமலேயே நம் நாட்டிலுள்ள அனேக பாமர மக்கள் பண்டைய கால் நாகரீகத்தால் ஞானத்தையும் விவேகத்தையும் பெற்றிருக்கிறார்களென்று நம் அனுபவத்தால் தெரிய வருகிறது. நம் நாட்டிலுள்ள பல கிராமங்களில் எழுதப்படிக்கத் தெரியாத கிராம மக்கள் புத்திகூர்மையாக இருப்பதை நம்மில் பலர் பார்த்திருக்கிறார்கள். பரந்த இலக்கிய ஞானம் கொண்ட கல்விபெறுததால் சில சமயங்களில் பரம்பரையாகவுள்ள ஞானத்தையும், விவேகத்தையும் மக்கள் மறந்து, நியாயமான எண்ணத்திற்குப் பதிலாக கோபத்தையும் ஆத்திரத்தையும் அடைகிறார்களென்பது துரதிருஷ்ட வசமாக நம்மில் பலர் அடைந்த அனுபவத்திலிருந்து தெரிகிறது. எழுதப்படிக்கத் தெரியாததால் முதலில் ஏற்படும் கோப உணர்ச்சியைத் தடுக்க முடிவதில்லை. இதனால் பாமர மக்களிடையே மனக் கலக்கமும், திகிலும் உண்டாக்கக் கூடிய அபாயம் ஏற்படுகிறது. இதை ஒருவரும் மறுக்க முடியாது. எழுதப் படிக்க தெரிந்து கொள்ளும் சக்தி ஒரு தனி நபரின் அனுபவங்களை விரிவாகச் செய்கிறது. கோபம் வரக் கூடிய அதே நிலைமையில் மற்ற தனி நபர்களும் பல்வேறு கோஷ்டியினரும் எவ்வாறு நடந்து கொள்கிறார்களென்று கல்வி யறிவுள்ளவர் தெரிந்து கொள்ளக் கூடும். அவசரமாக ஒரு நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு முன் அதனால் ஏற்படும் பலா பலன்களை உணர்ந்து, விஷயங்களை நன்கு தெரிந்து கொள்வதற்கான மனப்பான்மைக்கு கல்வி ஊக்கமளிக்கிறது. ஆனால் இதைப்பற்றி மிகைப்படுத்தியும் கூறக் கூடாது. ஏனெனில் பாமர மக்களின் மனக் கலக்கம், திகில் ஆகியவற்றைத் தடுக்க, எழுதப் படிக்கும் சக்தி முழுவதும் உத்திரவாதமளிப்பதாக இருக்கவில்லை. ஆனால் மனக்கலக்கத்தைத் தடுக்க கல்வியறிவு ஒரு மதிப்புள்ள முறையாக இருக்கிறது.

சமூகக் கல்வி

எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வதின் முக்கியத்துவத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது. நாம் பாமர மக்களிடையே செய்யும் வேலையில், வயது வந்தோர் கல்விக்குப் பதிலாக சமூகக் கல்விக்குப் முக்யத்துவம் அளிக்கவேண்டும். அதுவே முறையானதாகும் சமூகக் கல்வி மக்களுக்கு எழுதப்படிக்கப் பயிற்சி அளிப்பதுடன், பொதுஜன வாழ்க்கைக்குப் பிரயோஜனப்படும் பயிற்சியையும் அளிக்கிறது; சுகாதாரத்தில் சிறந்ததரன் ஏற்படச் செய்வது, பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது, சமூகத்திற்கு கடமையைச்

செய்து, பொறுப்பேற்றுக் கொள்வது, பொழுதுபோக்கு, விளையாட்டுகளுக்கு அதிக வசதிகள அளித்தல் ஆகியவைகளைப்பற்றி அறிவும், ஆற்றலும் இருக்கவேண்டும். இவை களைப்பெற சமூகக் கல்வி சக்தி அளிக்கக் கூடும. ஆகையால் சமூகக் கல்வி சம்மந்தமாக நம்முடைய திட்டம் 5 அம்சங்கள் கொண்ட தாகும். எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வது, சுகாதாரம், பொருளாதார நிலைமை, சமூக வாழ்க்கை ஆகியவற்றில் அபிவிருத்தி ஏற்படச் செய்வதே சமூகக் கலவியின் நோக்கம்.

இந்நாட்டில் ஜனநாயகம் சரியாக வேலை செய்வதற்கு சமூகக் கல்வி மிக முக்கியமான தாகுமென்று மிக அறிவு படைத்த இக் கூட்டத்தில் நான் வற்புறுத்துவது அவசிய மில்லை. "முதலில் நம்முடைய எஜமானர் களுக்கு கல்வி புகட்ட வேண்டுமென" 70 ஆண்டுகளுக்கு முன்பு கன்சர் வெட்டிவ் கட்சியைச்சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரி கூறினர். அப்பொழுது உண்மையாயிருந்த கூற்று இப்பொழுது இன்னும் அதிக உண்மை யாயிருக்கிறது. ஏனெனில் பலவித வேறு பாடுகளுடன் கூடிய எஜமானர்களின் எண் ணிக்கை அதிகரித்துவிட்டது. இவ்வித வேறு பாடுகளையுடைய எஜமானர்களிடம் வேலை செய்வதென்றால் அதற்கு கல்வி மிக அவசிய மாகும். ஆகையால் மக்களுக்கு கல்வி போ திப்பது அத்தியாவசியமாகிவிட்டது.

அடிப்படைக் கல்வி

சரியான கல்வி போதிக்கப்படாததால் ஜன நாயகத்திற்கு ஆபத்து ஏற்படுமென்ற விழிப்பு, உலகம் பூராவும் வயது வந்தோர் கல்வி இயக் கத்தை நிர்மாணிப்பதற்கு அறிவு படைத்த ஆண், பெண்களைத் தூண்டியிருக்கிறது. மக் களின் முன்னேற்றத்திற்கும் உலக சமாதானத் திற்கும் ஜீவாதாரக் கல்வி முக்கியமானதென யூனஸ்கோவால் வற்புறுத்தப்பட்ட விஷயத் தை இங்கே குறிப்பிடவேண்டும். ஜீவாதாரக் கல்வி—நம் நாட்டில் அடிப்படைக் கல்வி யெனக் கூறப்படுவது—அவ்வித திட்டங் களின் உடனடியான தேவைகளைப்பற்றியும், அவசரத்தைப்பற்றியும் வற்புறுத்துகிறது. பல நூற்றாண்டுகளாக இந்திய மக்கள் பரம் பரையான அறிவையும், விவேகத்தையும் பெற்றிருக்கிறார்ளென்று முன்பே கூறியிருக் கிறேன். அவ்வித பாம்பரை ஞானம் இருந் தும்கூட சில சமயங்களில் நாம் பெற்ற அறிவு, சகிப்புத் தன்மை, நல்லெண்ணம் ஆகியவற்றை எல்லாம் இழந்து கோபத்தால் பைத்தியம் பிடித்தவர்களைப் போல் ஆகிவிடுகிறோம். ஏன் இவ்விதம் சம்பவிக்கிறதென நாம் அறிந்து கொள்ள முயற்சிக்கிறோம்? இவ்விதம் ஏற் படுவது நம் பாமர மக்களின் மூட நம்பிக்கை யினால் (எளிதில் எதையும் நம்புவது) அல்லவா? உலகத்தின் பல்வேறு பாகங்களிலுமுள்ள பல வித நிலைமைகளுடன் நம் மக்கள் தொடர்பு வைத்துக்கொள்ளாததால்தான் இவ்வித விளை வுகள் ஏற்படுகின்றன.

கடந்தகாலங்களில் நாட்டின் பல்வேறு பாகங்களிடையே தொடர்பு மிக்க குறைவாக வும் தூரமாகவும் இருந்தபோது பரம்பரை ஞானம் போதுமானதாய் இருந்திருக்கலாம். இப்போது நாட்டின் பல்வேறு பாகங்களுக்கு மிடையே தொடர்பு அதிகரித்து வருவதால் பரம்பரை அறிவு போதுமானதல்ல. மற்ற நாடுகளின் நூதனமான விநோதமான பழக்க வழக்கங்கள், பரம்பரை முறைகள், நம்பிக்கை கள் ஆகியவற்றை நாம் சரியாக வியந்து புகழ நம் மனதை பழைய முறைகள் பக்குவப் படுத்தாது. மேலும் இப்போதுள்ள தொடர் புகள் நம் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக் கிடையே மட்டுமல்ல. உலகத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கிடையேயும் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் தனியான பிரதேசங்களில் வசித்துவந்த மக்கள், புதிய முறையில் வாழ்க்கை நடத்துபவர்கள், விநோதமான எண்ணங்கள், விநோதமான பரம்பரைக் கொள்கையுடையவர்கள் ஆகி யோர் முன்னிலையில் நேரடியாகக் கொண்டு விடப்படுகிறார்கள். அப்படியிருந்தும் கல்வி யறிவில்லாதவர்கள் கோபமாகவும், முட்டாள் தனமாகவும் நடந்துகொள்கிறார்கள்.

சினிமாப் படங்கள் மூலம் கல்வி

ஆகையால் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது நவீன உலகத்தில் ஒரு புதிய முக்கியத்துவத்தை அடைந்திருக்கிறது. படிப்பினால்தான் நம் மக்கள் நம் வாழ்க் கையைப்போல் இல்லாத வேறுபாடுகளுள்ள மற்றவர்கள் வாழ்க்கை வழிகளை அறிந்து கொள்ள முடியும். அவ்வித அறிவைக் கொடுக்க வேறு வழிகளும் இருக்கின்றன. ரேடியோக்களும், சினிமாப் படங்களும்

அதிகமாக உபயோகப்படுத்தப்படும் இடங்களில் அவைகளின் மூலமாக மக்களுக்குக் கல்வி புகட்டலாம். நாடகங்கள், விவாதங்கள், தர்க்கங்கள் முதலியவைகள் கல்வி புகட்டுவதற்கு வெகு துரிதமாக உதவி புரிகின்றன. ஆனால் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வதினால் ஏற்படும் பலன் மெதுவாகவும், தாமதமாகவும், இருந்தபோதிலும், அதிகச் செலவு ஏற்படாமலும் நீடித்து இருக்கக் கூடியதாகவும் இருக்கிறது. நம் நாடுபோன்ற ஒரு ஏழ்மையான தேசத்தில் கல்வி புகட்டும் சினிமாப் படங்களைக் காண்பிப்பதின் மூலம் அவ்வித அறிவைப் புகட்டுவதென்பது மிக்க கஷ்டமான காரியம். நம் மக்களிடையே நாம் காணும் எளிதில் நம்பும் தன்மை—அதாவது குருட்டு நம்பிக்கை,—ஜனநாயகம் சரியாக வேலை செய்வதற்கு ஒரு குறிப்பான அபாயம்தான். தற்போது நமக்கு ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், எழுதப்பட்ட வார்த்தைகளைக் கற்று உபயோகிப்பதின் மூலம் தான் அவ் வபாயத்தை அகற்ற முடியும். இந்த கொள்கைமூலம் பார்த்தாலும் சமூகக் கல்வி திட்டத்தில் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதின் முக்கியத்துவம் பற்றி ஒருவரும் எதிர்த்து பேச முடியாது.

ஆரம்பக் கல்வி அல்லது பிரைமரிக் கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப்பற்றியும், சமூகக் கல்வி அல்லது வயது வந்தோர் கல்வி ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப்பற்றியும் சில சமயங்களில் கிளப்பப்படும் தர்க்கம் சம்பந்தமாக குறிப்பிட விரும்புகிறேன். அவ்வித தர்க்கம் சரியாக தெரிந்து கொள்ளாததால் ஏற்படும் மனஸ்தாபத்தினாலன்றி வேறொரு அடிப்படையினாலும் அல்லவென்று எனக்குப் புலனாகிறது. பயனளிக்கக்கூடிய ஆரம்பக் கல்வி திட்டத்தை நாம் விரும்பினால் குழந்தை பள்ளிக்கூடங்களுக்குப் போக வேண்டும். எல்லா குழந்தைகளும் பள்ளிக்கூடங்களுக்குப் போனால்கூட போற்றத்தக்க அளவு நம் நாட்டில் வயது வந்தோர், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாய் ஆவதற்கு 15-20 வருஷ காலம் பிடிக்கும். பெற்றோர்கள் போஷகர்கள் ஆகியோருடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பில்லாமல், இந்த 15-20 வருஷ காலத்தில் நிர்ப்பந்தம் செய்வதென்பது உண்மையில் நடைபெறாது. குழந்தைகளின் போஷகர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு முழு மனதுடன் அனுப்பினாலொழிய கட்டாயப்படுத்துவதென்பது சர்க்காருக்கு மிக்க கஷ்டம். ஆகையால் ஆரம்பக் கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக்கவேண்டும் என்றால் போஷகர்களுக்கு கல்வி புகட்டும் பிரச்னையைத் தீர்க்கவேண்டியது அவசியமாகிறது. வயதுவந்தோர்களிடையே கல்வி புகட்டும் முயற்சியை முதலில் செய்தால் அதை வைத்துக்கொண்டே ஆரம்பக் கல்வியையும் அதிகபயனளிக்கக் கூடியதாய் செய்துவிடலாமென்று அனுபவம் காண்பிக்கிறது. 'நீ ஒரு பையனுக்கு கல்வி போதித்தால் நீ அப்பையனுக்கு மட்டும்தான் போதிக்கிறாய். ஆனால் நீ ஒரு பெண்ணுக்கு போதிக்கும்போது ஒரு குடும்பத்துக்கே போதிக்கிறாய்' என்ற ஒரு ஆங்கிலப் பழமொழி இவ்வுண்மையை ஊர்ஜிதம் செய்கிறது.

குழந்தைகளுக்குத் திட்டம்

வயதுவந்தோர் கல்வியின் ஆதரவில்லாமல் பிரைமரிக் கல்வி செழிக்க முடியாது. அதைப் போலவே குழந்தைகளின் கல்வியைப் புறக்கணிக்கும், எந்த வயது வந்தோர் கல்வி திட்டமும் வெற்றியடையாது. வயது வந்தோர் கல்வித் திட்டத்தைப்பற்றி அதிகமாக வற்புறுதிக் கூறுபவர்கள் சிலர் இருக்கின்றனர். அவர்கள் கூறும் நியாயம் ஆச்சரியப் படத்தக்கதாய் இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படிப்புக் கற்றுக்கொள்ளவேண்டிய காலம் முழுவதும் குழந்தைகளைப் புறக்கணித்துவிட்டு பிறகு மூன்று மாத காலம், ஆறு மாத காலம், ஒரு வருஷம்கூட நீடிக்கப்பட்ட வயது வந்தவர்களுக்குத்தான் தீவிர வகுப்புகளை ஏற்படுத்தி குறைகளை நிவாரணம் செய்யும்படி உதவியை நாடுகிறார்கள். அவ்வித கொள்கை முட்டாள்தனமானதாகும். நிச்சயமாக தீமை விளைவிப்பதாகும்.

வயது வந்தோர்களுக்கு ஒரு வருஷகாலம் கல்வி போதித்தால்கூட, குழந்தைகளுக்கு மனதில் பதிவதுபோல் இவர்கள் மனதில் பதிவதில்லை. எண்ணம், செய்கை ஆகியவற்றிலும் அபிவிருத்தி ஏற்படுவதில்லை. ஆரம்பக் கல்வி புறக்கணிக்கப்பட்டால், வயதுவந்தோர் கல்வியால் படிப்பின்மையையும் அறியாமையையும் ஒழிக்க முடியாது. இதற்கு உதாரணமாக சென்னை ராஜ்யத்தை எடுத்துக்கொள்வோம். இந்தியாவிலுள்ள ராஜ்யங்களில்

சென்னை ராஜ்யம் கல்வி விஷயங்களில் முன்னேற்றமடைந்த ராஜயங்களுள் ஒன்றாக யிருக்கிறது. ராஜ்யத்திலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு போகக்கூடிய 70 லட்சம் குழந்தைகளில் 35 லட்சம் குழந்தைகளுக்கு கல்வி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் ஏழு லட்சம் சிறுவர்கள் கல்வியைப் பெறாமல் வயது வந்தவர்களாகி எழுதப் படிக்கத் தெரியாத வயது வந்தவர்களின் கூட்டத்தில் சேர்ந்துவிடுகிறார்கள். சென்னையில் ஏற்கனவேயுள்ள எழுதப் படிக்கத் தெரியாத வயது வந்தவர்களோடு ஒவ்வொரு வருஷமும் எழுதப் படிக்கத் தெரியாத சுமார் ஏழு லட்சம்பேர் சேர்ந்துவிடுவதால், வயது வந்தவர்களுக்கான எந்தவிதக் கல்வி திட்டத்தையும் வெற்றிகரமாய் சமாளிக்கமுடியாது. ஆரம்பக் கல்வி திட்டமும் வயது வந்தோர் கல்வித் திட்டமும் வெற்றி பெறவேண்டு மென்றால், இவ்விரண்டையும் தொடர்ந்து ஏககாலத்தில் நடத்தவேண்டும்.

ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டிய தேவை

ஆரம்பக் கல்வியும், வயது வந்தோர் கல்வியும் முக்கிய மானதாகும். அற்குத் தேவையான ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்க நாம் வசதிகளைப் பெற்றிருக்கவேண்டும். ஆரம்பக் கல்விக்கும் வயதுவந்தோர் கல்விக்கும் அவசியமான ஆசிரியர்களையும் ஊழியர்களையும் நமக்கு சப்ளை செய்ய போதுமான விஸ்தரிக்கப்பட்ட அளவில் செகண்டரிக் கல்வித்திட்டம் இருக்க வேண்டும். செகண்டரி கல்வித்திட்டத்தை பலனளிக்கக்கூடிய முறையில் நிறைவேற்றி வைக்கும் ஆசிரியர்கள், தலைவர்கள் ஆகியோரை அளிப்பதற்கும், உயர்தரக் கல்விக்கும் ஏற்பாடுகள் செய்யாவிடில், செகண்டிரிக் கல்வியின் அவசியமான அளவை நாம் பராமரித்து வைத்துகொள்ள முடியாது. நம் கல்வி திட்டங்கள் நாட்டின் மூல சாதனப் பொருள்களைச் சார்ந்தே இருக்கும் நாம் பெற்றிருக்கும் இயற்கை மூல சாதனங்களை—மனிதர்களும், பொருள்களும்—எப்படி பயன்படுததிக் கொள்கிறோமென்பதும் முக்கியமானதாகும். தொழிற் செல்வத்தையும் வர்த்தகச் செல்வத்தையும் உண்டாக்கவேண்டுமென்றால் தொழில் விஞ்ஞான கல்வி திட்டங்கள் அவசியமான தாகும். தொழிற் செல்வம், வர்த்தகச் செல்வம் ஆகியவைதான் நாட்டிலுள்ள தேசிய கல்வி திட்டத்தை போஷிக்கமுடியும். கல்வி பலனளிக்கக்கூடியதா யிருக்கவேண்டுமானால் பொது ஜன சமூகத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதா யிருக்க வேண்டும். கல்வியின் ஒவ்வொரு அம்சத்தையும் கவனிக்கவேண்டும். ஏதாவது ஒரு அம்சத்தைப் புறக்கணித்தால் கல்விக்குத் தீங்கு ஏற்படும்.

கல்வி, பொது ஜன சமூகத்திற்கு வேண்டிய முக்கியமான தேவையாகும். இதை முழுவதும் உணராவிடில் எந்த விஷயத்திலும் எவ்விதமான முன்னேற்றமும் அடையமுடியாது. நாட்டின் தொழில் அபிவிருத்திக்காகவும், தொழில் நுட்ப ஆராய்ச்சியின் அபிவிருத்திக்காகவும் எந்தவித திட்டங்களை நாம் பெற்றிருந்தாலும், போக்குவரத்து, நீர்ப்பாசனம், விவசாயம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக எந்தவித திட்டங்களை நாம் வகுத்தாலும், சமூக க்ஷேமாபிவிருத்திக்கும், மானிட நலனுக்கும் எந்தவித திட்டங்களை நாம் வைத்திருந்தாலும், அவைகள் எல்லாம் நம்மிடமுள்ள, வேலை செய்யும் நபர்களின் திறமையைச் சார்ந்திருக்கிறது. நன்கு வகுக்கப்பட்ட திட்டங்கள், அற்புதமான சிறந்த யந்திரங்கள், கருவிகள் ஆகியவைகளை நன்கு பயன்படுத்தி வேலை செய்யத்தகுந்த மனிதர்கள் இல்லாவிடில், அவைகளால் சிறிது உபயோகம்கூட பெற முடியாது. ஒரு நாடு அங்குள்ள ஆண் பெண்களால்தான் நிர்மாணிக்கப்படுகிறது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு நம் நாடு சுதந்திர மடைந்ததும் அவ்விதமே. இப்பொழுது நமக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நம்முடைய மூல சாதனப் பொருள்களை—மனிதர்களையும், பொருள்களையும்—நன்கு பயன்படுத்திக்கொண்டால், நம் நீண்ட பரம்பரையான கலாசாரத்தையும் நாகரீகத்தையும் வைத்துக்கொண்டு உலக க்ஷேமாபிவிருத்திக்குச் செழிப்பாக உதவியளிக்கக்கூடும். நம் நாட்டிலுள்ள ஆண்களும் பெண்களும் சமயத்திற்கு தகுந்தபடி தைரியமாக வேலை செய்ய முன் வந்தால்தான் உலக க்ஷேமத்திற்கு உதவியளிக்க முடியும். நாடு பூராவும் சமூகக் கல்வி பரப்பும் திட்ட மூலம், வேலைகளுக்குத் தகுதியுள்ளவர்களாக நம்மைத் தயாரித்துக்கொண்டால் நாம் உலகிற்கு உதவியளிக்க முடியும். [சென்னைச் செய்தி]

முதியவரைப் படிக்கத் தூண்டுவதெப்படி?

(தி. ராஜகோபாலன்)

முதியவர் சபை ஆரம்பிப்பதற்கு முதல் நாள் என் நண்பர் ஒருவருடன், 'முதியவரை எப்படி முதியவர் சபையில் சேர்ந்து படிக்கத் தூண்டுவது?', என்று யோசித்தேன்.

என் நண்பர், "பல கடைகளிலும், சிறு தொழிற்சாலைகளிலும் வேலை செய்கிற முதியவர்களைச் சேர்ப்பதெனச்" சொன்னார்.

அப்படியே சிறு கடை, தொழிற்சாலை முதலாளிகளைக் கண்டு அவர்களிடம் வேலை செய்பவரை சபைக்கு அனுப்பிப் படிக்கவைக்கும்படி தூண்டினோம். பெரும்பாலோர் "இனிமேல் எங்கேப்பா படிப்பு வரப்போகிறது? அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றன." 'சரி இருந்தாலும் அனுப்புகிறேன்' என்று எங்கள் அரைமணி உபதேசத்திற்குப் பிரதிபலனாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொல்லியபடி முதியவர் சபைக்கு அனுப்புவதில்லை.

பிறகு நானும், நண்பரும், "முதலாளிகளிடம் சொல்லி அனுகூலமில்லை" என உணர்ந்து கொண்டு அக்கடையில், தொழிற்சாலையில் வேலை செய்யும் முதியவரை அழைத்து 'ஓய்வு நேரம், வேலைத் தன்மை, இருப்பிடம் இவைகளை அறிந்து கொண்டு எங்கள் பாடத்தை ஆரம்பித்தோம்; ஆனால் அம்முதியவர் எங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ளும் விதமாகப் பதில் சொல்லி விடுவார். அவர்கள் சொல்லும் பதிலாவது "இனிமேல் எங்கெங்கோ படிப்பு வரப் போகிறது. படித்து எந்த வேலைக்குப் போகப் போறேனுங்க!" என்பார். அதை நாங்கள் பொருட்படுத்தாமல், அரசாங்கம் வகுத்துள்ள புது திட்டத்தையும், முதியவர் படிப்புக்காக சர்க்கார் செலவிடும் தொகை முதலியவற்றையும், கல்வியின் அவசியத்தைப்பற்றியும் அன்புடனும், மரியாதையுடனும் எடுத்துச் சொன்னால், பிறகு "நாளை வருகிறேனுங்க" என்று சொல்லி நாளை வரமாட்டார். மறுநாளும் அவரைச் சந்திக்கும் போது ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி 'நாளை வருவதாகச்' சொல்வார். நாங்கள், "சரி நாளைதான் வாருங்கள். ஆனால் இன்று இடம் காண்பிக்கிறோம்" என்று சொல்லி அழைத்து வருவோம்.

சபையிடம் வந்ததும் "உள்ளே வாருங்கள்! என்று சொல்லி ப—வரிசையைக் கற்பித்தேன். பிறகு, "பார்த்தீர்களா? இன்று ப—வரிசை வந்துவிட்டது. நாளை வந்தால் ட—வரிசைக் கற்றுக் கொடுத்து விடுவேன். இப்படி 30 நாட்களில் எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளலாம் என்று சொல்வேன். பிறகு அவரிடம் காகிதம், பென்சில் கொடுத்து சொன்னதை எழுதச் சொல்வேன். அவர் அடக்கமான, அன்பான கட்டளைக்குட்பட்டு எழுதுவார்.

வரும் முதியவர்களில் சிலர் கைப்பழக்கத்தினால் நன்றாக எழுதுவர். பலர் சரியாக எழுதமாட்டார்கள். இருந்தாலும் பார்த்தீர்களா, உங்கள் கையெழுத்து நன்றாக இருக்கிறது. நீங்கள் நாளையும் வந்தால் ட— வரிசை வந்துவிடும். இப்படியாக இன்னும் முப்பது நாட்களில் தமிழ் எழுத்துக்கள் எல்லாம் தெரிந்து விடும் என்று சொல்லி அனுப்புவேன். அத்துடன் மறுமுறையும், சர்க்கார் முதியவர்களுக்காக செலவு செய்யும் பணத்தையும், முயற்சியையும், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் படிக்காததன் கெடுதல்களையும் எடுத்துச் சொல்லி, இன்னும் 'உங்களைப் போன்ற முதியவர்களை நாளை அழைத்து வாருங்கள்' என்று சொல்லி அனுப்புவேன். பிறகு அவர் விடாமல் வர ஆரம்பித்துள்ளார்.

முக்கியமாக முதியவரை சபையில் சேர்க்கும் போது கவனிக்க வேண்டியது யாதெனில்; ஒரு அறிமுகமாகாத முதியவரை படிக்க அழைக்கும் போது அவரைத் தனியாக அழைத்து இருப்பிடம், வேலை செய்யுமிடம் இவைகளைக் கேட்டு, அவர் இருப்பிடம், வேலை செய்யுமிடம் முதியவர் சபைக்கு அருகில் இருந்தால் அதற்குமேல் அவரைப் படிக்கத் தூண்டுவதுதான் பலனளிக்கிறது.

முதியவர், சபையில் சேர்ந்தவுடன் அவருக்குத் தேவையான புத்தகம், பென்சில் நாமே கொடுக்க வேண்டும். அத்துடன் அவர் தொடர்ந்து வர; முதியவர் பிழையாக எழுதினாலும், தவறாகச் சொன்னாலும், 'மிக நன்றாகச் சொல்கிறீர்களே? இன்னும் தவறாமல் வந்தால் சீக்கிரம் தமிழ் கற்றுக் கொள்ளலாம்! என்று ஊக்குவிப்போம். சிறிது கூட கோபம் என்பதே கூடாது. இதைவிட முக்கியமானது அவர்களுக்குக் கற்பிக்கும்போது குழந்தைகளைப் போன்று தாறுமாறாகச் சொல்வதைக் கண்டு நமக்கு நகைப்பு ஏற்படும். அப்பொழுது அதை வெளிக் காட்டாமல் இருப்பதுதான் மிக மிக முக்கியமானது. அப்படிச் சிரித்து விட்டால், முதியவர், 'தன்னைப் படிக்க வைத்து கேலி செய்கிறார்' என்று எண்ணி வரமாட்டார்.

அவர் கேட்கும் கேள்விக்கு அன்பான தக்க பதிலும், சகிப்புடனும் நடந்து கொள்வது தான் அவர்களைத் தொடர்ந்துவரச் செய்யமுடியும்.

(தொடரும்)

இரண்டாம் பகுதி

படிப்பிப்பவருக்கு குறிப்புகள்

— கோபால் —

இப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் பாடங்கள், எங்களுடைய பல ஆண்டுகளின் அனுபவ பயனாகவும், வட ஆற்காடு ஜில்லா செங்கம் தாலூக்காவில் நடத்திய எழுத்தறிவு இயக்கத்திற் கிடைத்த சிறந்த அனுபவத்தின் பலனாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டில் வசிக்கும் எழுத்தறிவு பெற்ற ஒவ்வொரு தமிழனும் எழுத்தறிவில்லா ஒவ்வொரு தமிழனுக்கும் எழுத்தறிவிக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம். ஆதலால் படிப்பில்லாமலிருக்கும் வயது வந்தவர்களின் மனோபாவத்தை ஒட்டியே எழுதியுள்ளது. வயது வந்தவர்களும், பாலர்களும் வெகு சீக்கிரமாகவும் சுலபமாகவும் இம்முறையைக் கையாண்டால் பலனளிக்கும் என்பது எங்களுடைய அனுபவ திண்ணமான நம்பிக்கை.

வயது வந்தவர்களின் மனோபாவமும், படிப்பித்தலும்

வயது வந்தவர்கள் படியாதவர்களாய் இருப்பினும் அவர்கள் பல விஷயங்களில் அறிவுள்ளவர்கள். வாழ்க்கையின் அனுபவத்தினால் பொது விஷயங்களை வெகு சுலபமாக ஏற்றுக்கொள்ளவும் அதைத் திரும்ப விளக்கிப் பிறருக்குச் செவ்வனே சொல்லவும் திறமையுள்ளவர்களாதலால் அவர்களுக்கு ஒழிவு நேரங்களில் அன்புடனும், விடாமுயற்சியுடனும் கற்பித்தால், ஆறே வாரங்களில் படிக்க எழுதப் பழக்கிவிடலாம். முதலில் அவசரப்படாமல் வர வர வேகம் அதிகரிக்கலாம். அதற்குத் தக்கவாறு பாடங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தப்பிதம் செய்தால் கோபமோ, பரிகாசமோ, தப்பிதத்தை தப்பிதமென்று சொல்லுதலோ கூடாது. அவ்விதம் செய்தால் அசட்டை ஏற்பட்டு, ஆர்வம் குறைந்து படிக்கப் பிரியப்பட மாட்டார்கள். குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறை வேறு முதியோர்களுக்குக் கற்பிக்கும் முறை வேறு. குழந்தைகளுக்குக் கற்பிப்பது போல் வகுப்பு அறைப்பள்ளி வெகுவாகப் பலனளிக்காது. அவர்களுக்குத் தனித்தனியே அவரவர்களின் மனோபாவத்தை ஒட்டியே, ஒழிவு நேரங்களிலும், இடங்களிலும் கற்பிப்பதே சிறந்தது.

எனவே, வயது வந்தவர்கள் மனோபாவத்துக்கும், குழந்தைகளின் மனோபாவத்துக்கும்—வேற்றுமையை அறிந்து படிப்பிக்கும் ஒவ்வொருவரும் அதற்குத் தக்கவாறு வேலை செய்தல் வேண்டும். படிக்கப் பழகுபவரைக் கௌரவத்துடனும், வெகு அன்புடனும், பிழைகள் செய்தபோது சாமர்த்தியமாக நடத்த அறிந்துகொள்ளுதலும் வேண்டும்.

உபகரணங்கள்

குழந்தைகளுக்கு ஏற்ற வகுப்பறைப் பாட திட்டங்களும், கால அட்டவணையும், மற்றப் பள்ளி சட்ட திட்டங்களும் இவ்வியக்கத்துக்குப் பலனளியா. எழுத்தறிவு இயக்கம் பலனடையப் படித்தவர் தொண்டாற்றல் அவசியம். கிராமங்களிலும், நகரங்களிலுள்ள பேட்டைகளிலும் படித்தவர்களைக் கொண்ட "கல்வியின்மையைப் போக்கும்" சங்கங்கள் நிறுவப்படவேண்டும். அச்சங்கங்களில் பள்ளியில் படிக்கும் 15 வயதுக்கு மேற்பட்ட வாலிபரும், படிக்கத்தெரிந்த பெரியோரும் அங்கத்தினர்களாக இருக்கலாம். இதன் முக்கிய நோக்கம் படிப்பின்மையைப் போக்குதலும், படித்தவர்களைப் படியாதவர்களுக்குத் தங்கள் ஒழிவு நேரங்களில் அவர்கள் அண்டையிலுள்ள ஒருவருக்காவது கற்பிக்கத் தூண்டுதலும், படிக்கப் பழகியவர் மறுபடியும் படிப்பின்மை அடைதலைத் தடுத்தலுமாக இருக்கவேண்டும். அதற்குத் தக்கவாறு ஆறுமாத திட்டத்தை வகுத்துக் கொள்ளலாம். முதல் மாதத்தில் எழுத்தறிவு பெற்ற ஆர்வமுள்ள வாலிபர்களையும், பெரியோர்களையும் கொண்ட சங்கம் நிறுவுதல், வாலிபர்களுக்கு முதியோர் கல்வி முறையில் பயிற்சியளித்தல், அச்சங்கம் ஏற்பட்ட கிராமத்திலோ அல்லது பேட்டையிலோ படித்தவர், படியாதவர் கணக்கைத் தெரிந்துகொள்ளுதல். இரண்டாவது மாதத்தில், கல்வியின் அவசியத்தையும், அதனாலுண்டாகும் பலன்களையும் தனிப்படப் பிரசாரங்கள் செய்வதோடு பல அறிஞர்களை அழைத்து, கூட்டங்கள் நடத்துதலும் வேண்டும். துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிச் செய்தித் தாள்கள், பள்ளிப்பிள்ளைகளைக் கொண்டு ஊர்வலம், பாட்டுகள் மூலமாகவும் பிரசாரம் செய்து முதியோர்கள் படிக்க ஆர்வத்தையும், ஆசையையும் ஊட்டவேண்டும். படியா மக்கள் கூடுமிடங்களில் தமிழ் மொழி வெகு சுலபமாகவும், விரைவிலும் கற்றுக்கொள்ள முடியுமென்ற எண்ணத்தைப் பட (Chart) மூலமாக விளக்கிக்காட்டல் வேண்டும். இதற்கு ஏற்ற பாடங்களும், சுவரொட்டித் தாள்களும் எங்களிடம் கிடைக்கும். அவற்றைக்கொண்டு வெகு எளிதில் விளக்கலாம். மூன்றாவது மாதத்தில் அவரவர்கள் ஒழிவு நேரங்களிலும், படிப்பு இடங்களிலும் படிப்பிக்க ஆரம்பிக்கலாம். படிப்புப் பழக்கத்தைக் கல்வித் தொண்டர்கள் அன்புடனும், சாமர்த்தியத்துடனும் கற்பித்தால் ஒரு மாதத்திலேயே படிக்கப் பழக்கிவிடலாம். தாங்கள் கற்ற கல்வியைப் பிறருக்கு அவ்வப்

போது கற்பிக்கச் செய்தால் எழுத்தறிவு வேகமாகப் பரவுதலோடு படிப்பின் பயனைப் பெறுவதுமன்றி அவர்களின் கவனமும் அதிகமாகும். மற்ற மூன்று மாதங்களில் சிறு அச்சுப் புத்தகங்களை படிப்பதுமல்லாது, கூட்டெழுத்துக் கடிதங்களையும், பத்திரங்களையும் படித்து அறிந்துகொண்டு அதற்குத் தக்க பதிலும் எழுதலாம். அதற்கு ஏற்றவாறு எங்கள் முறை அமைக்கப்பட்டிருக்கிறது. இம் மாதங்களில் படித்தலை எழுதவும், எழுதுதலைப் படிக்கவும் வேண்டும்.

பாட முறை

முதியோர் எழுத்தறிவு இயக்கம் வெற்றி பெற வேண்டுமானல், முதியோர்களின் மனோபாவத்திற்கு ஏற்ற பாடமுறை முதலாக அமைந்திருக்கவேண்டும். அது எளிய முறையில் சீக்கிரத்தில் பயிலும்படி இருக்கவேண்டும். முதல் படித்தலும், இரண்டாவது எழுதுதலும். பிரசங்கங்கள் மூலமாகக் கேட்ட எழுத்துக்களையோ அல்லது பொருளையோ ஒலிவடிவமாக உரைப்பதே படிப்பு. வரி வடிவமுள்ள எழுத்துக்களினல் ஆகிய பதங்களை கண்ணால் கண்டு அவையென்ன என்றறிந்து நாவினல் உச்சரிப்பதே படிப்பு. எனவே, படிப்பு முறையை மூன்ருகப் பிரிக்கலாம். (1) எழுத்து முறை, (2) பத முறை, (3) வாக்கிய முறை. இம் மூன்று முறைகளையும் கொண்டு ஆசிரியர்கள் பலர் அவரவர் கண்ட அனுபவங்களை எழுதியுள்ளனர். இவைகள் அநேகமாகப் பாலர்களுக்குப் பலனளிக்கக் கூடியதாக இருக்கிறதே ஒழிய முதியோருக்குப் பலனளித்ததாகத் தெரியவில்லை. வாக்கிய முறையிலும், பத முறையிலும் பெற்ற அனுபவத்தை ஒட்டியே எழுதியுள்ளார்கள். ஆனல் எமது "தமிழ் படி" புத்தகம் மேற்கூறப்பட்ட மூன்று முறைகளையும் தழுவி எழுதியுள்ளது. இந்த முறை முதியோர்களுக்கு மட்டுமல்லாது குழந்தைகளிடமும் கையாண்டு பலனளித்திருக்கிறது.

பாடம்

முதல் எழுத்து ப வரிசை. பாப்பா என்ற பதம் ப வரிசையிலிருந்தே கொடுக்கப்பட்டிருக்கிறது. ப வரிசையிலுள்ள எழுத்துக்களும் பதங்களும் வாக்கியங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரிசையிலுள்ள எழுத்துக்கள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இடப் பக்கம் குறிலும், வலப் பக்கம் நெடிலும், அடியில் பை, பௌ, ப் என்ற மூன்று எழுத்துக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எழுத்துகளை முதலாக படிப்பிக்க வேண்டும். தமிழிலுள்ள மொத்த எழுத்துக்களை எடுத்துக்காட்டுதல் கூடாது. இலக்கணங்களைக் கவனித்தல் கூடாது. தமிழில் 13 ஓசைகளைத் தெரிந்துகொண்டால் தமிழ் மொழியை ஒரே மாதத்தில் கற்கலாம் என்று அவர்களுக்கு ஆச்சரியப்படு முறையில் சொல்லுதல் வேண்டும். முதவில் 5 குறுகிய ஓசையுடைய எழுத்துக்களைச் சொல்க. பிறகு நீண்ட ஓசையுடைய எழுத்துக்களைச் சொல்லவும். இவைகளின் வித்தியாசத்தை எடுத்துக்காட்டவும். பிறகு குறுகிய நீண்ட பத்து ஓசைகளையும் அவர்களுக்கு விளங்கும்படி பாடிக்காட்டி, அல்லது உச்சரித்துக் காட்டி உங்களுடன் சொல்லச் செய்யவும். முதல் 10 ஓசைகளைச் சுலபமாக ஐந்து நிமிடங்களில் படிப்பித்துவிடலாம். பத்து ஓசைகளுக்குப் பிறகு பை, பௌ, ப் ஓசைகளையும் பாடியோ, உச்சரித்தோ வித்தியாசத்தைக் காட்டல் வேண்டும். உச்சரிப்பு வித்தியாசம் தெரிவதற்கு நான்கு அல்லது ஐந்துதடவைகள், ப வரிசையிலுள்ள எழுத்துக்கள் மனத்தில் படியாத இடங்களில் சற்று நிதானமாக உச்சரித்தும், வித்தியாசங்களை விளக்கி அவர்களையும் நம்முடன் உச்சரிக்கச் செய்தல் வேண்டும். இம்மாதிரியாக முதல் எழுத்தாகிய ப வரிசையைக் கற்க சுமார் 8 அல்லது 10 நிமிடங்களாகும். இவ்வரிசையில் உச்சரிப்பைச் சரியாகத் தெரிந்துகொண்ட எந்த முதியோரும் தமிழிலுள்ள எந்த எழுத்து வரிசையைச் சொல்லும்படி செய்தாலும் வெகு எளிதாகச் சொல்லமுடியும். ப வரிசையிலுள்ள உச்சரிப்புகளைத் தெரிந்து அதிலுள்ள ஓர் எழுத்துப் பதங்கள், இரண்டெழுத்துப் பதங்கள், இப்பதங்களினல் ஆகிய வாக்கியங்களை எடுத்துக்காட்டல் வேண்டும். இவ்விதம் செய்வோமானல் முதல் பாடம் விரைவில் கற்றதினல் ஆச்சரியமடைந்து, ஆவலும், ஆசையும் அதிகமுண்டாகும். இரண்டாவது ட வரிசை கொடுக்கப்பட்டிருக்கிறது. ப வரிசையிலுள்ள எழுத்துக்களைக் கொண்டும், ட வரிசையிலுள்ள எழுத்துக்களைக் கொண்ட பதங்களும், வாக்கியங்களும் கோர்த்து கொடுக்கப்பட்டுள்ளது. அதே மாதிரி படிக்கத் தெரிந்த எழுத்துக்களைக் கொண்ட புதிய எழுத்துக்களுடன் அமைக்கப்பட்ட பாடங்களாக இருக்கின்றன. இதனல் முதியோருக்கு அசட்டையும், ஏமாற்றமும் ஏற்படாமல், கற்க ஆவலும் வேகமும் ஏற்படும். படிக்கும்பொழுது ஒவ்வொரு எழுத்தையும் முதியோர் கண்டறிவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. புதிய எழுத்தைக் கற்கும் போது அதை வித்தியாசப்படுத்தியும் இருக்கிறது. எழுத்தறிவு இயக்கத்தில் முதல் காதால் கேட்டதை பாடுதல் அல்லது சொல்லுதல், பிறகு காணுதல், கண்டதைப் பார்த்து சொல்லுதல், அஃதாவது படித்தல், கடைசியாக எழுதுதல்.

எழுதுதல்

"தமிழ் படி" என்ற முதல் புத்தகத்தை மூன்று வாரங்களிலோ அல்லது ஒரு மாதத்திலோ முடித்துவிடலாம். தமிழ்மொழி எழுத்துக்கள் அநேகமாகக் கோடுகளினல் அமைந்திருப்பதாலும், பார்த்ததை மனதில் இருத்திக்கொள்ள முதியோர்கள் சக்தியுள்ளவர்கள் ஆதலாலும் அவர்கள் கைத்தொழில் திறமையுள்ளவர்கள் ஆதலாலும் வெகு எளிதாக எழுதப் பழகிவிடுவார்கள். அதுவும் பெண்கள் வெகு விரைவில் பழகலாம்.

முதல் பாடம்

பாப்பா

ப	பூ	பா
பி	பை	பீ
பு	போ	பூ
பெ		பே
பொ	பூ பை	போ

பை பௌ ப்

பாப்பா பூ பை

பாப்பா போ

இரண்டாம் பாடம்

டப்பி

ட	படி	டப்பா	டா
டி	பாடு	பாட்டா	டீ
டு	பிடி	பாட்டி	டூ
டெ	படை	பிட்டு	டே
டொ	போடு	பொட்டு	டோ

டை டௌ ட்

பூட்டுப் போட்ட பெட்டி

பாடுபட்டு பாட்டைப் படி

பட்டு! பட்டே படிப்பு

படிக்கும் தொண்டரின் பெயரும், விலாசமும் } ....

படிப்பிப்பவரின் பெயரும், விலாசமும் } ....

மூன்றும் பாடம்

ச ட் டி

ச	செடி	சொட்டு	சா
சி	சபை	பூச்சி	சீ
சு	சாட்டை	சிப்பு	சூ
செ	பசு	பச்சை	சே
சொ	சூடு	சேட்டு	சோ

சை சைள ச்

பாடுபட்டு சாப்பிடு

சாப்பாடு சாப்பிட்டு பேசு

சட்டசபைப் போட்டிச் சீட்டைப் படி

நான்காம் பாடம்

தூ ச் சு

த	தா / தீ	தட்டு / துப்பு	தா
தி	தை / திசை	தொட்டி / பத்து	தீ
து	தேதி	புத்தி	தூ
தெ	பை தை / பாத்தி தடு		தே
தொ	தீப் பெட்டி / தோசை தட்டு		தோ

தை தைள த்

சீதா! சூது பேசாதே

பை தைத்துத் தா

தீப்பெட்டி பத்து பைசா

மூன்றும் பகுதி

இது உங்களுக்குத் தெரியுமா?

நமது நாட்டுக்கு வடமேற்கே பாரசீக நாடு இருக்கிறது. அதை ஈரான் என்றும் பர்சியா என்றும் அழைப்பது வழக்கம். இன்றைக்கு சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலேயர்கள் பாரசீகத்தில் மண்ணெண்ணை ஊற்றுக்கள் அதிகமாக இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். கண்டுபிடித்தவுடன் அதைப் பாரசீக மன்னருக்குத் தெரிவித்து அந்த அரசரின் அனுமதியின்மேல் அங்கு எண்ணை எடுக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தினுர்கள். பிறகு பாரசீக அரசாங்கம் அனுமதியால் அநேக எண்ணை தொழிற்சாலைகள் ஏற்படுத்தினர். பூமியிலிருந்து எண்ணையை எடுத்து அதை எல்லா நாடுகளுக்கும் வினியோகித்து வந்த ஆங்கிலேய கம்பெனியார், பாரசீக அரசாங்கத்தோடு குத்தகை ஒப்பந்தம் செய்துகொண்டனர். இந்த 50 ஆண்டுகளாக குத்தகை ஒப்பந்தத்தை ஆங்கிலேயர் அடிக்கடி நீடித்து வந்தது. ஆரம்பத்தில் இந்தக் குத்தகைமூலம் சிறிது வருமானமே பெற்றுவந்த பாரசீக அரசாங்கம் குத்தகை ஒப்பந்தத்தை நீடிக்கும் போதெல்லாம் கம்பெனியாரிடம் குத்தகைப் பணம் அதிகம் கேட்டு வந்தனர். கம்பெனியாரும் அதற்கு சிலசமயம் உடன்பட்டும் சிலசமயம் முரண்பட்டும் வந்தனர்.

இரண்டாவது மகா யுத்தத்திற்கு பிறகு உலகெங்கும் தாழ்த்தப்பட்ட நாடுகளுக்கெல்லாம் தேசீய விழிப்பு அதாவது சுதந்தர உணர்ச்சி ஏற்பட்டது. அப்போது விழித்துக் கொண்ட பாரசீக நாட்டுக்கும், உலகத்துக்கே வினியோகிக்கக்கூடிய அளவு எண்ணை தன்னிடமிருந்தும், அந்தத் தொழிலை அன்னியரிடம் ஒப்புவித்திருப்பது முட்டாள்தனமாகப் பட்டது. அதன் விளைவாக ஆங்கிலோ-ஈரானிய எண்ணைத் தொழிலைத் தேசீய மயமாக்குவதென்று ஈரான் பார்லிமெண்டு தீர்மானித்துள்ளது. அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக ஆங்கிலோ-ஈரானியக் கம்பெனியை எண்ணை ஸ்தாபனத்தைத் தங்களிடம் ஒப்படைக்கச் சொல்லி கட்டளை இட்டனர்.

உலக உற்பத்தியில் பெரும் பகுதி பெட்ரோல் ஈரானில் கிடைக்கிறது. அந்த வியாபாரத்தில் கம்பெனிக்கு ஏராள லாபம் கிடைக்கிறது. அதை இழக்க பிரிட்டனுக்கு மனமில்லை, அதனுல் அது ஈரானிய அரசாங்கத்திற்கு இன்னும் எவ்வளவு அதிகமாக வேண்டுமாயினும் குத்தகைப் பணம் தருவதாகவும், ஆகையால் பாரசீக சர்க்கார் சமாதானமாகப் போகும்படியாகவும் கேட்டுக்கொள்கிறது.

மேலும் ஆங்கிலேய அரசாங்கம் ஆங்கிலோ-ஈரானிய ஒப்பந்தம் நீடிக்கக் கூறும் காரணங்களாவன: (1) தங்களைப்போல் ஈரான் எண்ணை

(தொடர்ச்சி 2-வது ரேப்பரில் பார்க்கவும்)

தேசிய சபதம்

"காமு"

சம்பந்த முதலியார் குடும்பம் பெரிய பணக்காரகுடும்பம். அவருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும். பங்களா வாசம் ஏவின வேலைகளைச் செய்ய பணியாட்கள். முதலியாரின் மனைவி, பிள்ளைகள், பெண், மூத்த பிள்ளையின் மனைவி யாவருமே நன்கு படித்தவர்கள். முதலியாரும் அவருடைய மனைவியும் சமூகக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்கள். இளையவன் மாதவன் மணமாகாதவன், சீர்திருத்தவாதி. ஏழை எளியோர் எல்லோரையும் சகோதரராகப் பாவிப்பவன். அவர்களின் வாழ்க்கையை எல்லாவிதத்திலும் உயர்த்தப் பாடுபடுபவன். முக்கியமாக அவர்களின் நல்வாழ்க்கைக்குக் காரணம் எழுத்தறிவு. ஆதலால் அவர்களுக்குப் படிக்க வசதி அளிக்கவேண்டுமென வாதாடுபவன்.

மூத்த மகன் சுந்தரம் படித்தவனாயினும் மிகவும் கர்வி. வேலையாட்களை அடிமைகளென எண்ணுபவன். உல்லாச வாழ்க்கையில் காலத்தை கடத்துபவன். அவன் தங்கை பத்மாவும் அவனைப்போலவே சுபாவமுள்ளவள்.

மூத்தவனின் மனைவி ரேணுகா முற்போக்கு குணமுள்ளவள். அவள் எல்லா விதத்திலும் மாதவனைப் பின்பற்றுபவள். அவனுடைய வேலைகளுக்கு உற்சாக மூட்டுபவள். கணவனின் கர்வத்துக்காக வருந்தி அவனைத் திருத்த முயற்சிப்பவள்.

ஒழிந்த வேளைகளில், காவல்காரன் தோட்டக்காரன், வேலைக்காரி, வேலைக்காரப் பையன் எல்லோரையும் அழைத்து மாதவன் படிப்பிப்பான். ரேணுகாவும் அப்படியே. இதை சுந்தரமாவது பத்மாவாவது காண நேர்ந்தால் இது மிகவும் கேவலமான செய்கையென சண்டையிடுவார்கள். ரேணுகா பயந்தபடியே நழுவி விடுவாள். மாதவன் இவை ஒன்றையும் லட்சியம் செய்யமாட்டான். ஆனால் வேலையாட்கள் நடுங்குவார்கள்.

ஒருநாள் பத்மா வேலைக்காரியை ஏசிக்கொண்டிருந்தாள். அவளுடைய முக்கியமான கடிதம் ஒன்றை அவள் பெருக்கி எறிந்துவிட்டாள் என்பதற்காக "எழுத்து வாசனையறியாத முண்டம்தானே நீ" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், அந்தப் பக்கம் வந்த ரேணுகா அவளைத் தடுத்து அந்தமாதிரி சொல்லுபவள் வேலைக்காரிக்கு எழுத படிக்கச் சொல்லிக்கொடுத்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று சொல்லுகிறாள். பத்மா அண்ணியின்மீது தன் கோபத்தைக் காட்டுகிறாள். எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த மாதவன் அண்ணி சொல்வதுதான் சரியெனத் தங்கையைக் கண்டிக்கிறான். ஆத்திரமடைந்த பத்மா அண்ணியைப்பற்றித் தாயிடம்புகார் செய்கிறாள். ரேணுகாவின் குணமறிந்த தாய் பத்மாவை சமாதானம் செய்து அனுப்புகின்றனர். சாந்தமடையாத பத்மா அண்ணா சுந்தரத்திடமே அண்ணியைப்பற்றியும் மாதவனைப்பற்றியும் அவதூறு சொல்லுகிறாள். பொறுமையற்ற சுந்தரம் மனைவியைத் தேடிவருகையில் ரேணுகாவும் மாதவனும் சமூக சீர்திருத்தத்தைப் பற்றியும் கல்வி இல்

லாமையை ஒழிக்கவேண்டும் என்பதைப் பற்றியும் தம்மை மறந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். சுந்தரம் அதைத் தவருக எடுத்துக் கொண்டு மனைவியையும் துன்புறுத்தி தம்பியையும் வீட்டைவிட்டு விரட்டி விடுகிருன்.

வீட்டைவிட்டு வெளியேறிய மாதவன் பல கஷ்டங்களடைந்து படிப்பறியாத ஏழைகளைப் படிப்பிக்கப் பாடுபாடுகிருன். எழுத் தறியாமையைப் போக்க பல இடங்களில் பிரசங்கங்கள் செய்கிருன். சிலர் அவனோடு ஒத்துழைக்க முன்வந்தனர் பலர் அவனைப் பரிகாசம் செய்தனர். அவன் சிரமப்பட்டு எழுத்தறிவிக்கும் கூட்டத்தில் மிகவும் துடியாக இருந்த ஒரு அண்ணனும் தங்கையும் இருக்கின்றனர். அவ்விருவரும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள். அண்ணன் பெயர் சின்னசாமி. தங்கையின் பெயர் வள்ளி. வள்ளியும், சின்னசாமி என்ற இளைஞனும் எல்லா விஷயங்களையும் உற்சாகத்தோடு எளிதில் கற்றுக்கொண்டனர். வள்ளியின் அறிவும், அழகும் மாதவனை அடிமைப்படுத்தியது.

அடிக்கடி தாயைமட்டும் போய்ப் பார்த்துவரும் மாதவன் தன் காதலைத் தாயிடம் தெரிவிக்கிருன். தாய் சம்மதம் தர மறுத்து விடுகிருள். காலம் மாறுகிறது. சின்னசாமி கல்வி இலாகாவுக்கு மந்திரியாக வருகிருன். சுந்தரம் அளவுக்கு மிஞ்சிய அனுவசிய செலவால் ஏழ்மை நிலையடைந்து வியாதிக்கு ஆளாகிருன். பல்கலாசாலை மாணவி பத்மா ஒரு உல்லாச வாலிபனுல் கெடுக்கப்பட்டு கைவிடப் படுகிருள். முதலியாரின் மனைவி தன் நிலைமையை நினைத்து வருந்துகிருள்.

குடும்பத்தின் நிலை கேட்டறிந்த மாதவன் ஓடோடி வருகிருன். தாயும் தமையனும் அவனை அன்புடன் வரவேற்கின்றனர். அண்ணி ஆனந்தமடைகிருள். மாதவனைக் காண வந்த சின்னசாமியை சந்தித்த பத்மா அவனிடம் மனதைப் பறிகொடுக்கிருள். சின்னசாமி நாடு கல்வி யறிவுள்ள நாடானுல்தான் எனது திருமணம் என்கிருன். மாதவன் தன் தங்கையின் கதையைக் கூறித் தனக்காக அவளை ஏற்க வேண்டுமென்றும், அவளும் அவனுடைய வேலைக்கு உதவி புரிவாள் என்றும் மன்ருடுகிருன். வள்ளி, மாதவன், பத்மா, சின்னசாமி, ரேணுகா சுந்தரம் யாவரும் தங்களாலானவரை வாழ்க்கையில் கல்வியில்லாத எளியோருக்கு கல்வி புகட்டுவதாக சபதம் செய்துகொள்கின்றனர். சுதந்தரம் பெற்ற நம் மக்கள் எல்லோரும் சுகமாக வாழ வேண்டுமானுல் படித்த எல்லோரும் படியாத மக்களுக்கு எழுத்தறிவூட்டுவது தேசீய சேவை என்று சபதம்கொள்ள வேண்டும்.

மதுரை, இராமநாதபுரம் ஜில்லா முதியோர் கல்வி மகாநாடு

மதுரை மத்திய முதியோர் கல்வி கமிட்டியின்சார்பில்

ஜூலை மாதம் இறுதி வாரத்தில் மதுரையில் இரண்டு நாட்கள் நடைபெறும்.

மகாநாட்டை சென்னை ராஜ்ய உணவு மந்திரியும், தென்னிந்திய முதியோர் கல்விச் சங்க பொதுக் காரியதரிசியுமான **கனம் J. L. P. ரோச்-விக்டோரியா அவர்கள்** திறந்துவைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். முதியோர் கல்வி அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் தலைவர்கள் பலர் கலந்துகொள்கிருர்கள்.

இந்தியாவில் ஐ. நா.வின் பிரதேசக் கல்வி மன்றம்

உலகில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் மொத்தம் 120 கோடிப் பேர்கள் என்று ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபன டைரக்டர்-ஜெனரல் ஜேம் டோரெஸ் போதெத் மதிப்பிடுகிருர்.

எழுத்தறிவின்மையை உலகில் இருந்து நீக்கிவிட முயன்று வரும் இந்த ஐ. நா.வின் ஸ்தாபனம் அடிப்படை கல்வி மன்றங்களை இந்தியா உட்பட உலகில் ஆறு பிரதேசங்களில் வைத்து நடத்துவதென்று திட்டம் வகுத்திருக்கிறது.

இத்திட்டத்தைப் பாரிஸில் ஜூன் மாதம் 18-ந் தேதி கூடிய ஸ்தாபனத்தின் ஆருவது பொது மகாநாடு விவாதிக்கப்பட்டது.

திட்டத்தில் கண்டுள்ள பிரதேச அடிப்படைக் கல்வி மன்றங்களின் முக்கிய வேலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், கல்விக்கான விஷயங்களைத் தயாரித்துக் கொடுப்பதுமாகும். இம் மன்றங்கள் 12 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும் என்று திட்டம் கருதுகிறது.

மக்களுடைய பண்பாடும், மொழியும், கல்வித் தேவைகளும் இடத்துக்கு இடம் மாறுபடுவதாலும், மக்களுடைய கல்வி விஷயத்தில் அரசாங்கம் அளிக்கக் கூடிய உதவியும் இடத்துக்கு இடம் வேறுபடுவதாலும், ஐ. நா. ஸ்தாபனம் அடிப்படைக் கல்வி மன்றங்களை உலகில் பல வேறு பிரதேசங்களில் பிரதேசத்துக்கு ஒன்ருக அமைக்க எண்ணுகிறது.

உலகிலுள்ள எழுத்தறிவின்மையைப் போக்கும் இம் மகத்தான சேவையைச் செவ்வையாகச் செய்வதற்குக் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனம் இப்பொழுது தகுந்த ஒரு திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது என்று போதெத் பாராட்டுகிருர்.

ஐக்கிய நாட்டின் புது டில்லி நூல் நிலையம்

முதியோர் கல்விக்காகப் புது டில்லியில் ஐக்கிய நாடுகளின், கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனம் 1950-ல் அமைத்த ஒரு நூல் நிலையத்தைப்போல் இன்னும் பல நூல் நிலையங்களை உலகமெங்கும் அமைப்பதென்று ஸ்தாபம் யோசனை செய்துள்ளது. இது பாரிஸில் நடந்த ஆருவது பொது மகாநாட்டில் விவாதித்திருக்கிறது.

முதியோர் கல்வி பரவுவதற்காகத் தனித்த ஒரு முறையில் அமைந்த புது டில்லி நூல் நிலையம் படிப்பதற்கு நூல்களை இலவசமாகக் கொடுத்து உதவுகிறது; வாசிக்கும் முறையை முதியோர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்குச் சிலர் வேலை பார்க்கின்றனர். திரைப்படம் காண்பித்தும், விவாதங்கள் நடத்தியும், படிக்கும் நூல்களின் வரிசையை வெளியிட்டும், இசைத் தட்டுகளை வைத்துப் பாடல்களைப் பரப்பியும், பொருட்காட்சிகளை அமைத்தும், சிறுவர்களுக்கான கதைகள் சொல்லி

யும் முதியோர்களுக்கு வாசிக்கும் ஆர்வத்தை ஊட்டுகிறார்கள். நூல் நிலயங்களுக்கு எட்டாத தொலைவிலுள்ள இடங்களுக்கு நூல்களை வண்டிகளில் வைத்துக் கொண்டு செல்வதும் இப்பொழுது முக்கியமாக நடைபெறுகிறது.

புது டில்லி கல்வி போர்டு ஏழு முதியோர் கல்வி மன்றங்களையும், 16 இலக்கிய மன்றங்களையும் நடத்திவருகிறது; இத்தகைய ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்கிறது ஐ. நா.வின் புது டில்லி நூல் நிலயம்.

இத்திட்டம் நடைபெற ஆலோசனை டைரக்டராக இருந்தவர் டாக்டர் எட்வர்ட் சிட்னி என்ற ஆங்கிலேயர். இவரை அடுத்து வர இருப்பவர் டாக்டர் தாஸ் ராஜ் கலியா என்பவர்; இவர் நூல் நிலய நிர்வாகம் பற்றி ஐ. நா. உதவியில் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்.

1952-ல் இப்புது டில்லி நூல் நிலயத்தைப் போன்ற ஒரு நூல் நிலயத்தைத் தென் அமெரிக்காவில் தொடங்கப் போகிறார்கள்.

1953-ல் நூல் நிலய அதிகாரிகள் அனைவருக்கும் ஓர் ஆராய்ச்சி நிலயத்தை மத்திய ஆப்பிரிக்காவில் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

தென்னிந்தியாவுக்கு 17,000 டன் தானியம்

தானியங்களில் பெரும் பாகத்தைத் தாங்கி வந்த கப்பல்கள் ஐந்து. இவற்றில் முதல் இரண்டும் சென்னைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்தன; மற்ற மூன்றும் விசாகப்பட்டினத்துக்குச் சென்றன. இவை அனைத்தும் சென்ற யுத்தத்தில் சரக்கேற்றச் செல்லப் பயன்பட்ட அமெரிக்கக் கப்பல்கள்.

இவை ஐந்தையும் தவிர இவை போன்ற வேறு 16 கப்பல்களையும் இந்தியாவுக்குத் தானியங்களை ஏற்றிச் செல்வதற்காக வெளியே கொண்டு வந்துள்ளனர். 'லிபர்ட்டி' கப்பல்கள் என்ற பெயர் படைத்த இவை சென்ற யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன.

இந்த ஐந்து கப்பல்கள் ஒவ்வொன்றும் சென்னை மாகாணத்தில் 3,000 டன் தானியங்களை இறக்குமதி செய்துவிட்டு மீதி 6,000 டன்களைக் கல்கத்தாவில் இறக்குவதாகக் கொண்டு செல்கின்றன. சென்னையில் இன்னும் 2,000 டன் கோதுமையை இறக்கிய கப்பல் எஸ். எஸ். ஸ்கௌடா.

1951-ல் இந்திய அரசாங்கம் அமெரிக்காவில் வாங்கியுள்ள தானியங்களின் அளவு 13,76,800 டன். இதில் 2,00,000 டன் ஏற்கனவே இறக்குமதியாகிவிட்டது. இது இந்தியாவுக்கு உணவு உதவி செய்யும் மசோதாவில் கண்ட உணவு 20 லட்சம் டன் தானியங்களோடு சேர்த்து எண்ணப்படாது.

இம் மசோதாவில் கண்ட உணவுத் தானியங்களை இந்தியாவுக்கு விரைவாக எடுத்துச் செல்ல, சென்ற யுத்தத்தில் ஈடுபட்டு இப்பொழுது ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சுமார் 100 கப்பல்கள் வெளியே கொண்டு வரப்படும்.

22476



1951-ம் ஆண்டு எப்ரல் மாதம் 23-ந் தேதியிலிருந்து 30-ந் தேதி வரையில் அடையாரில் நடந்த தென்னிந்திய முதியோர் கல்வி முதல் அரங்கில் வந்திருந்த பிரதிநிதிகளும் தலைவர்களும் கொண்ட புகைப்படம்.

Edited and Published by Sri T. J. R. Gopal for S.I.A.E.A. at 2/21, First Line Beach, Madras-1 and Printed by Sri S. Sundareasan, L.P.T., at the Central Co-operative Printing Works, Ltd., 1/17, Mount Road, Madras—750-7-'51.